
புரவலர் புத்தகப் பூங்காவின்

23-ஆவது வெளியீடு

# விற்பனைக்கு ஒரு கற்பனை



ஆரையூர் தாமரை

# விற்பனைக்கு
# ஒரு
# கற்பனை

## (கவிதை)

சர்வதேச மகளிர் தின சிறப்பு வெளியீடு

ஆரையூர் தாமரை

வெளியீட்டகம்:

**புரவலர் புத்தகப் பூங்கா**

25, அவ்வல் சாவியா ரோட்,

கொழும்பு 14, ஸ்ரீலங்கா.

## பதிவுத் தரவுகள்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | விற்பனைக்கு ஒரு கற்பனை |
| வகை | : | கவிதை |
| ஆசிரியர் | : | ஆரையூர் தாமரை |
| உரிமை | : | ***இலக்கிய புரவலர் ஹாசிம் உமர்*** |
| | | இல. 46, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை, |
| | | கொழும்பு – 03. |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 2009 |
| பதிப்பாசிரியர் | : | கலைஞர் கலைச்செல்வன் |
| அட்டைப்பட அமைப்பு | : | எஸ்.அனுர்ஜன் |
| பக்கங்கள் | : | X + 70 = 80 |
| அச்சிட்டோர் | : | டிசைன் லப் – கொழும்பு 13. |
| | | 0112 431531, 0114 575 777 |
| வெளியீட்டாளர் | : | **புரவலர் புத்தகப் பூங்கா** |
| | | 25, அவ்வல் சாவியா றோட், கொழும்பு 14. |
| | | 0774 16 16 16 , 0786 367431 |
| விலை | : | ரூபா 150/= |

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | Vitpanaikku Otu Katpanai |
| Category | : | Poem |
| Author | : | Aaraioor Thamarai |
| Copyrights | : | Puravalar Hassim Omar |
| | | No.46, Ananda Coomarasamy MW. |
| | | Colombo - 03 |
| First Edition | : | November - 2009 |
| Publishing Editor | : | Kalaignar Kalaichelvan |
| Cover Design | : | S.Anurjan - Design Lab |
| Pages | : | X + 70 = 80 |
| Printed | : | Design Lab |
| | | 173-P2, George R. De. Silva Mw, Colombo 13. |
| | | 0112 431 531 www.dsignslab.com |
| Publishers | : | **Puravalar Puththaka Poonga** |
| | | 25, Awwal Zavia Road, Colombo 14. |
| | | 0774161616 - 0786 367 431 |
| Price | : | Rs. 150/= |
| ISBN | : | 978-955-095-06-8 |

இந்நூல்....

என் ஆதர்ஸமான அம்மம்மா
பொன்னர் தங்கப்பிள்ளைக்கு...

சமர்ப்பணம்

# பதிவுகள்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும்
ஒரு சாதனையாளன் உறங்கிக்கொண்டோ
விழித்துக்கொண்டோதான் இருக்கிறான்
ஆற்றல்கள் அரங்கேற வேண்டுமானால்
அடையாளங்கள்
பதிவு செய்யப்படல் வேண்டும்.
ஒரு சாதனையாளனுக்கு மகுடம் சூடுவதும் பதிவுகள் தான்.
புரவலர் ஹாசிம் உமர் அவர்களின்
**மாதம் ஒரு நூல்**
**இலவச வெளியீட்டுத் திட்டம்**
வேர்களுக்கு விலாசம் தரும் ஒரு செயற்கரிய செயற்பாடு.
புரவலர் புத்தகப் பூங்காவின்
ஒவ்வொரு வெளியீடும்
ஒரு சாதனையாளனை - ஒரு படைப்பாளியை
பதிவு செய்து கொண்டிருக்கிறது.
இது நம்மூர் இலக்கியப் புரவலரின்
விழுமிய எண்ணத்தின் விடிவுகள்!
இரண்டு ஆண்டுகளில் இருபது நூல்கள்
பூங்காவில் பூத்துள்ளது....
ஆரையூர் தாமரையின் கற்பனைத் தடாகத்தில்
ஊற்றெடுத்த கவிதைத் தொகுப்பே
விற்பனைக்கு ஒரு கற்பனை
இது புரவலர் புத்தகப் பூங்காவின்
இருபத்து மூன்றாவது வெளியீடாகும் மீன்பாடும் தேன்நாட்டில்
கவிபாடும் பெண் மானாக நடைபோடுகிறாள்
ஒரு இளம் கவிதாயினி
எங்கள் நிறுவனத்திலிருந்து
தொடர்ந்தும் பயனுள்ள அறுவடைகளை எதிர்பார்க்கலாம்!

**- பதிப்பகத்தார்**

புரவலர் புத்தகப் பூங்கா
25, அவ்வல் சாவியா ரோட்,
கொழும்பு - 14, ஸ்ரீ லங்கா.

# கடவுளின் இரசிகை...

நானும்தான் கவிதை எழுதுகிறேன் - ஆனால்
என்னால் அவனைப்போல் எழுத முடிவதில்லை.
நிலத்தின்மேலே விழாது உயர்ந்தபடி இருக்கும் - நீள்
சுளகினைக் கவிழ்த்தது போல் வானம்.
சோளனப்பம் ஒன்று சுடச்சுடக் கீழே விழாது வானையும்
சுட்டுத் தீய்க்காதபடி ஒட்டியிருக்கும் சூரியத்தீ
மயிலிறகு விசிறிகளால் விசிறினாற்போல் - மண்வாழ்
உயிர்களுக்குச் சேவகம் செய்யும் காற்று
ஓரமாய்க்காயும் நீலச்சோலையில் - ஊறிய
ஈரத்தை ஊருக்குள் பிழிந்துவிடாத கடல்.
நீர்த்துளி உருளும் தாமரை இலையாய் - மனித
வாழ்க்கைகளோடு ஒட்டாது சுழலும் பூமி
இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ - அழகிய
அற்புத கவிதைகளை படைத்த கடவுளெனும்
மாபெரும் கவிஞனின் இரசிகையானபடியால் - ஓரளவு
நானும்தான் கவிதை எழுதுகிறேன்.

**-அன்புடன் ஆரையூர்தாமரை**

# வானளந்த நன்றிகள்...!

நானளந்த "கவிதைத் தொகுப்பு" - எனும்
கன்னிமுயற்சிக் கனவுத் தொகுப்பை
நனவாக்கிய பெரும்மதிப்பிற்குரிய - புரவலர்
ஹாசிம் உமர் "புரவலர் புத்தகப் பூங்கா"
வெளியீட்டு நிறுவனத்தினருக்கும், - என்
வெளியீட்டுக்கு உதவிய மாமா, எழுத்தாளர்
அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்கட்கும், என்னை
உற்சாகப்படுத்திய அன்பு அப்பா ஆரையூர் இளவல்
க.செல்லத்தம்பி அவர்கட்கும், - அன்பு
அம்மா, தவமணிதேவி செல்லத்தம்பி அவர்கட்கும்,
கவிதையுலகிற்குள் நுழையக் காரணமான - என்
அம்மம்மா அமரர் அங்கப்பிள்ளை இராசையா அவர்கட்கும்,
மற்றும் சகோதர சகோதரிகளுக்கும், இங்கும்
வெளிநாடுகளிலும் - என் கவிதைகளுக்கு இரசிகர்களைத் தந்த
பத்திரிகைகளுக்கும், முக்கியமாக "வீரகேசரி", "தினகரன்" உடன்
சஞ்சிகைகளுக்கும், முக்கியமாகக் களம் தந்த
மட். ரேயாப் பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின்
"பெண்" சஞ்சிகைக்கும் உளமார்ந்த - என்
வானளந்த நன்றிகள். அத்துடன் அனைவருக்கும்
பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் ஆசிர்வாதத்திற்காக,

**- பிரார்த்திக்கும் தாமரை**

## பதர்களுக்கு மத்தியில் நெல்மணிகள் !

ஒரு காலத்தில் பண்டிதவர்க்கத்தினரிடம் சிறைப் பட்டிருந்த கவிதையை மகாகவி பாரதி சிறைமீட்டான். அதைத் தொடர்ந்து பாரதிதாசன், கவிமனி தேசிகவிநாயகம் பிள்ளை, கவியரசர் கண்ணதாசன் முதலியோர் இனிய எளிய தமிழில் கவிதைகள் எழுதினர்.

அடுத்த தலைமுறையில் புதுக்கவிதை தோன்றியது. இன்று ஏராளமான புதுக் கவிதையாளாகள் உருவாகி யுள்ளனர். நுற்றுக்கணக்கான புதுக்கவிதைகள் வெளிவரு கின்றன இவற்றுள் பதர்களுக்கு மத்தியில் நெல்மணி களாய் சில கவிதைகள் பளிச்சிடுகின்றன. எழுதுகோல் ஏர் பிடித்து நெல்மணிகளை விதைக்கும் எழுத்தாளர்களில் ஆரையூர் தாமரையும் ஒருவர். இவரது கவிதைகளை தாம ரைக் கவிதைகள் எனக் குறிப்பிடுவது பொருத்தமானது. நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ள. ஆரையூர் தாமரையின் ஒரு சில கவிதைகள் விற்பனைக்கு ஒரு கற் பனை எனும் வித்தியாசமான மகுடத்தில், இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. இவற்றில் கவித்துவம் தனித்துவம் என்பன சுவைஞரின் தரிசனம்.

ஆகவே அவற்றைப் பற்றி இவ்வுரையில் குறிப்பிடு வது அவசியமில்லை ஆனாலும் அவரது கவிதைப் பொருள் அதனைத் கவிதையில் பதிக்கும் கலைவண்ணம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறலாம்.

ஏனைய கவிஞர்களின் பார்வையைவிட இவரது பார்வை சற்று கூர்மையானது. அதுவே இவரது கைவண்ணமாகவும் அமைகிறது எனலாம். உதாரணமாக ஜப்பானிய பழைய கவிதை மரபான 'ஞாழுமய' முறை சில கவிதைகளில் காணலாம். நீளமான இக்கவி வடிவம் "முகவரி பாடும் முகிலில்" புத்துயிர் பெறுவதைக் காணலாம். மற்றும் கடித வடிவம், நொடி வடிவம், இசைப்பா (மரபு) வடிவங்களையும் இவரது கவிதைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. புதுமையான உருவகங்கள் புதுமையான படிமங்கள், புதுமையான சிந்தனை என்பவற்றை இவரது கவிதைகளில் தரிசிக்கலாம். காலம் காலமாக நம் சமூகத்தில் தோன்றியுள்ள சில அவலங்களை வேதனைகளை, பெருமூச்சுகளை அவர் வித்தியாசமான கோணங்களில் அணுகி அவைபற்றிய வித்தியாசமான சிந்தனைகளுக்கு-நம்மை இட்டுச் செல்கிறார்.

சில வேளைகளில் மேலோட்டமாக பார்ப்பவர்களுக்கு இவற்றைப் புரிந்து கொள்வது சற்று சிரமமாக இருக்கலாம். ஆனாலும் ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு அவை சட்டெனப் புரியும். உளவியல்ரீதியில் சில கவிதைகள் இவரது இன்னொரு சிறப்பு (முயல் மெத்தை என் வீட்டுத் தோட்டத்தில் மயில் முட்டை ) எனலாம்.

மட்டக்களப்பு சூரியா இலக்கியப் பண்ணையில் உருவாகிய இவர் புதுமை நோக்கம் கொண்ட புதுமைப் பெண்ணாக இருந்தாலும் மரபுரீதியான கலை கலாசாரங்களையும் பண்பாடுகளையும் போற்றி மதிப்பவர். இவரது கவிதைகளின் அடிநாதமாக இப்பண்பு ஒலிப்பதை நாம் அவதானிக்கலாம்.

இலைமறைகாயாக இருக்கும் எத்தனையோ இலக்கியகாரர்களை மக்களுக்கு அறிமுகம் செய்துவரும் "புரவலர் புத்தகப் பூங்கா" இவரையும் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்கிறது. இதுவே அவரது எதிர்கால பிரகாசத்துக்கு வழியமைக்கும் என்பது நிதர்சன உண்மை. புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களுக்கும் - பூங்காவின் அளப்பரிய செயற்பாடுகளை அயராது முன்னெடுத்துச் செல்லும் செயலாளர் கலைஞர் கலைச்செல்வன் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

**- இரா. நாகலிங்கம்**

**( அன்புமணி )**

**இல: 34, புதிய வன்னியார் வீதி,**

**மட்டக்களப்பு**


# ஐயரின் ஆமைக்குற்றி

கோயிலுக்குப்
போகும் போதெல்லாம்
அங்கிருக்கும்
ஒரேயொரு பொருள் மட்டும்
என்னைப் பார்த்துக்
கண்சிமிட்டும் நேரம்
புரியாத ஒரு ஆனந்தம்
புதிதாக ஒரு அமைதி - என்னுள்
பொசுக்கென்று பிறக்கும்.

எத்தனையோ
அலங்காரங்கள் கொண்ட
அழகுப் பொருட்களாலும்
அழகிய வண்ணங்களினாலான
கோயிற் சுவர்களும்
கோபுரங்களும் - அதனுள்
குடியிருக்கும் தெய்வங்கள்.
கோடிதவமிருந்தாலும் கவலைகள்
ஓடிப்போனதாகவும் தெரியவில்லை
புதிதாக வராமலிருந்ததும் இல்லை. !

இந்தக்
குவலயபீடத்தில்
ஆலயம் - ஒரு
அழகான சிற்பக்கூடம் - ஒரு
அழகான ஓவியக்கூடம் - இங்கு
இல்லாத நிம்மதிக்காக
இல்லாத இறைவனைத்
தேடிவரும் போது எல்லாம் - நான்
தேடாத தொடாத அது
கண்சிமிட்டும் - ஓரக்
கண்ணால் அதன்
பேரழகை நானும் இரசிப்பேன்.





என் இரசிப்பிற்குரிய
அந்தப் பொருள்
ஐயர் ஒவ்வொரு முறையும்
யாகம் செய்யுமுன்
அமர்ந்திருக்கும் அழகிய
வேலைப்பாடுகளாலான
மரத்தில் செதுக்கப்பட்ட
ஆமைக் குற்றி.

நான்கு கால்களையும்
ஒரு தலையையும்
ஒரே சமயத்தில் - தன்
ஓட்டுக்குள் இழுக்கும்
ஆமையைப் போன்று
யாகத்தின் முன்
ஐம்புலன்களையும்
ஐயர் அடக்குவதாக - ஒரு ஐதீகமாம்.

ஊர்ந்து செல்லும்
கூர்மத்திற்குப் பொன்னாபரணங்கள்
பூட்டியது போலழகு
காட்டிநிற்கும்
ஐயரின் ஆமைக் குற்றி
கோயில் வாசலைக்
கடந்து வந்த பின்பும்
விடாப்பிடியாய் உட்கார்ந்திருக்கும்
ஆழ்மனதில்.

அப்போதெல்லாம் - புத்தி
லேசாகக் கூட
லௌகீக வாழ்க்கையில் திரும்பாது.
லயித்துப் போயிருக்கும் அமைதியில். !

# ஜன்னல் வழியாக...

வானத்து
விரிசல்களை நட்சத்திரங்கள் என்று
இரசித்தவனே ! – உன்
வாழ்க்கையின் விரிசல்களின் போது
ஏனோ அழுகிறாய்?
உன்னைப் பார்த்து
வானம் சிரிக்கிறது.

முள்ளின்
உச்சியில் உட்கார்ந்திருக்கும் ரோஜாவை
இரசித்தவனே ! – உன்
முயற்சிகள் உட்கார்ந்திருக்கும் போது
ஏனோ அழுகிறாய் ?
உன்னைப் பார்த்து
முள் சிரிக்கிறது.



வேப்பம்பூவின்
கசப்பும் அருமருந்தாம் என்று
இரசித்தவனே ! – உன்
வேதனைப் பூக்கள் கசக்கும் போது
ஏனோ அழுகிறாய் ?
உன்னைப் பார்த்து
வேப்பம்பூ சிரிக்கிறது.

கல்லின்
பின்னேயொரு கடவுள்சிலை என்று
இரசித்தவனே ! – உன்
காதல் கல்லாய் மாறும்போது
ஏனோ அழுகிறாய் ?
உன்னைப் பார்த்து
கல் சிரிக்கிறது.

ஏழையின்
உணவுகூட அமுதம் என்று
இரசித்தவனே ! – உன்
உணவின் சுவைகள் குறையும் போது
ஏனோ அழுகிறாய் ?
உன்னைப் பார்த்து
ஏழ்மை சிரிக்கிறது.


வயலின்
நரம்புகள் அழுவதை இசையென
இரசித்தவனே ! – உன்
துயரின் ஆழத்தின் போது
ஏனோ அழுகிறாய் ?
உன்னைப் பார்த்து
வயலின் சிரிக்கிறது.

இயற்கையின்
துயரெல்லாம் வாசல் வழியாய் நின்று
இரசித்தவனே ! – உன்
துயர்களைக் கொஞ்சம்
ஜன்னல் வழியாய்
நின்றுபார் !
உன்னைப் பார்த்து
நீயே ஓர்நாள் சிரிப்பாய். !



# அவதாரம் எடு !

படிப்பை முடித்து விட்டு
அடுப்படியில் அமர்ந்து கொண்டு
அரட்டையடிக்கும் பெண்ணே ! - உன்
பிறப்பும் புனிதமானதடி
அதைப்
புரிந்து கொண்டு - உன்
பொழுதை வீணாக்காது
சுயமாய் செயற்படு.
உன்னைச் சுற்றியிருப்பவர்களுக்காக
உன் நாளைய சந்ததியினருக்காக
ஏன் ?
உனக்காக - நீ
உண்மை என நம்பும்
எத்தனையோ பொய்கள்
உன்னைச் சுற்றியிருக்கின்றது
அவைகளை
அவிழ்த்தெறிந்து அம்மணமாய்
வெளியே வந்துவிடு.
வாழ்க்கை என்ற பூந்தோட்டத்தில்
விரக்தி என்ற வெய்யிலினால்
கருகிப்போன - பெண்
பூக்களுக்காகப் போராடு.
மனிதங்களைப் புனிதங்களாக்கும்
அவதாரமாகப் புறப்படு - உன்
பிறப்பிற்கான பெருமைகளைப்
புரிந்திடும் சங்குசக்கரமில்லாச்
சயம் சூடாப் புது அவதாரமாகப்
போராடு புகழோடு.





# கற்றுத்தரவா? கற்றுத்தர வா!

நான் பசி என்கிறேன் – நீ
மீன் பிடிக்கக்
கற்றுத் தருகிறாய்.

நான் தாகம் என்கிறேன் – நீ
கிணறு வெட்டக்
கற்றுத் தருகிறாய்.

நான் பீத்தல் என்கிறேன் – நீ
ஊசிநூல் கோர்க்கக்
கற்றுத் தருகிறாய்.

நான் ஓவியம் என்கிறேன் – நீ
தூரிகை பிடிக்கக்
கற்றுத் தருகிறாய்.

நான் காவியம் என்கிறேன் – நீ
வர்ணித்துப் பாட
கற்றுத் தருகிறாய்.

நான் இராகம் என்கிறேன் – நீ
சுருதி கூட்டக்
கற்றுத் தருகிறாய்

நான் விணை என்கிறேன் – நீ
இசை மீட்டக்
கற்றுத் தருகிறாய்.

நான் உயரம் என்கிறேன் – நீ
ஏணி செய்யக்
கற்றுத் தருகிறாய்.

நான் உறக்கம் என்கிறேன் – நீ
பாய் இழைக்கக்
கற்றுத் தருகிறாய்.

நான் கடல் என்கிறேன் – நீ
படகு செய்யக்
கற்றுத் தருகிறாய்.

நான் சோகம் என்கிறேன் – நீ
முகாரி பாடக் கற்றுத் தருகிறாய்

நான் உன்னைப் பார்க்கிறேன் – நீ
கற்றுத்தரவா? கற்றுத்தர வா ? என்கிறாய்.

# கருப்பைத்தீவு புத்தாண்டு

போர்த்தீயின் தணல்
கண்ணில் பட்டதால்
கார்மேகம் கதறிஅழ
இயற்கை அழிவோ – இல்லை
செயற்கை அழிவோ
இலங்கைக்கு எனப்
பட்டிமன்றம் நடாத்தும்
பஞ்சாங்கங்கள்.
வீட்டுக்கு வீடு
வாசற்படி பழமொழி
அகதி முகாமுக்கு அகதிமுகாம்
ஆலமரத்தடி புதுமொழி – இதில்
வரவிருக்கும் சித்திரை
வருடப் புத்தாண்டுக்காய்
பட்டாசும் பட்டமும்
பட்டாடையும் பட்சணமும்
கேட்கும் குழந்தைகளின்
மூக்குச் சிணுங்கல்கள்.
விலைவாசிகளின் ஏற்றத்தால் – அவர்கள்
ஆசைகளை நிறைவேற்ற முடியாமல்
விழிபிதுங்கும் தகப்பன் முதலைகள்.
எரிகின்ற வயிற்றுக்காக
எரியாத அடுப்புக்கு
விறகு தேடி – தென்னம்
பாளைகள் பொறுக்கும்
ஏழை மனைவிகள்.
இவர்கள்
நேற்றைய பணக்காரர்கள்
கொஞ்சங்கூட
வஞ்சகம், பேதம் பார்க்காமல்
வறுமைக் கோட்டுக்குக் கீழ்
வீழ்த்திவிட்ட முதலாளித்துவம் !
வெளுக்காத கிழக்கில்
வெளுத்து வாங்குகிறது வோட்டு வியாபாரம்
வெற்றியின் களிப்பில் அதிகாரம்
சுற்றியுள்ள பன்னீர்க் குடத்தில்
குழந்தையில்லாக் கருப்பைத்தீவாய்
உழைப்பு இல்லா இலங்கைத்தீவு
இதில்
இளவேனில் இசைக்காது
இசைத்தாலும் இனிக்காது
சித்திரை வருடப் புத்தாண்டும்
சித்திரவதைப் புத்தாண்டே. !







# தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்கள்

தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்களே – உங்களைத்
தேடினேன் கொஞ்சம் நில்லுங்களே.
ஒயிலாடும் தோட்டத்துத் தேவதைகளே – நீங்கள்
ஒரு நிமிடம் சோகம் சொல்லுங்களேன்.

வெய்யில்வந்து தூங்கிடும் குளிர்களே – குளிர்ப்
பனிவந்து தூங்கிடும் பயிர்களே
பயிர் வந்து தூங்கிடும் மலைகளே – தினம்
துயில்வந்து தூங்காத விழிகளே

மலையோரம் ஊர்ந்தோடும் ஈரங்களே – வந்து
விழியோரம் சேர்ந்தோடும் பாருங்களே
தலையோரம் கயிரோடும் தூரங்களே – தேய்ந்து
நிலைமாறும் மடுவாரும் பாருங்களே.

ஈரைந்துக் கிலோமீற்றர் மலைமேலே – ஒரு
நாள்தோறும் நடக்கோணும் பாருங்களே
ஈர்பத்துக் கிலோகிராம் தேயிலைகளே – ஒரு
நாள்போதும் பறிக்கோணும் பாருங்களே.

கொழுந்துகள் பறித்திடும் கரங்களே – கருந்
தழும்புகள் கைசேரும் கணங்களே
கூடையால் கூனலேறும் முதுகுகளே – மலை
நாட்டோட முதுகெலும்பும் நீங்களே.

இரத்தங்கள் உறிஞ்சிடும் அட்டைகளே – மனித
உருக்கொண்டு உழைப்பினை உறிஞ்சும்களே
துரத்துங்கள் வாழ்க்கையின் அழமட்டங்களே – இந்த
உருத்தேய்ந்தாலும் பிறையாக ஒளிருங்களே.

லயத்தோரம் வாழ்ந்திடும் குயில்களே – கங்காணியிடம்
சுயகௌரவம் இழக்காது வாழுங்களே
வயித்தோரம் தவழ்ந்திடும் பிள்ளைகளே – கல்வியால்
உயர்ந்தேற்றம் பெற்றிட்டால் இன்பங்களே.

ஆரையூர் தாமரை



# விற்பனைக்கு ஒரு கற்பனை


வெட்டிய பலாக்காயில்
ஒட்டிய ஈக்கள் கூட்டமாய்
சனக்கூட்டம் மொய்க்கும்
சந்தைத் தோட்டம்
அதில்,
வெண்டைக்காயோடு காய்கறிக்காரனோ
தொண்டைகாயக் கூவிவிற்க
கொண்டை குலையக்குலைய
கீரைக்காரியோ குழைந்துகுழைந்து விற்க
ஒருபுறம்
வாசனைச் சரக்குக்காரனோ
இழுத்திழுத்துக் கூவி விற்க
வாயூறப் பழக்காரனோ
இனிப்பினிப்பாய்ப் பேசிவிற்க
மறுபுறம்
தொம்தரிகட தொம்தரிகட
தொந்திவயிற்றில் தொங்கும்மார்பு
வந்துவிழ இறைச்சிக்கடைக்காரன்
கொத்தும் கத்தியின்சத்தம்
ஒரு பக்கம் காதில் கேட்கும் - என்
புருவங்கள் உயர்கிறது
பங்குபங்காய் கறியைவைத்து
அதில் மூளைக் கறியைக்
குறைந்த விலைக்கு ஜப்பானென்றும்
நிறைந்த விலைக்கு இலங்கையென்றும் - அவன்
கூறிவிற்க நானும்கேட்டேன்
ஏனிந்த விலைபேதமென்று ?
ஐயோம்மா !
பாவிக்காத இலங்கை மூளைக்கு
கோபிக்காதே விலையதிகம்
கண்டுபிடிப்புக்கள் பல கண்டு பிடித்துக்
கிடந்து தேய்ந்த ஜப்பான்மூளைக்குக்
கொடுக்கலாமோ விலையதிகமென்றான் ? - நான்
சிரிக்கிறேன், சிந்திக்கிறேன்.

தென்றல் காற்று வருகுது - மெல்ல
தென்னங் கீற்றைத் தழுவுது
கொன்றை கண்டு சிரிக்குது - அதில்
கோடி சந்தம் பிறக்குது.

மலையின் மீது அருவிகள் - தினம்
மத்த சாங்கள் போடுது
தலையை நீட்டிக் குருவிகள் - தன
தந்த னத்தோம் எனப் பாடுது.

வான மேகம் வார்க்குது - மழையால்
வையம் தாகம் தீர்க்குது
வீணே வெயிலும் தோற்குது - மீட்டும்
வீணை மயில் தோகையாகுது.

உயர்வு தாழ்வு மறையுது - இங்கு
உண்மைக் காதல் மலருது
இயற்கை வாழ்வை உணர்த்துது - இருந்தும்
இதையுணர உலகு மறுக்குது



# உண்மைக் காதல்


# காதலர் தினம்

கலண்டர் தாள்கள்
கிழியக் கிழிய
பெப்ரவரி பதினான்கு
நெருங்குவது நெஞ்சில்
நெருப்பாய் எரிகிறது.

மறக்க நினைத்தவைகள்
பறந்து வந்து - மீண்டும்
நெஞ்சக் கூட்டினுள்
கறையான் புற்றுக் கட்டுகிறது.

கொஞ்சம் கொஞ்சமாய்
குறையத் தொடங்குகிறது
வலுக்கட்டாயமாக நான்
கொலு வைத்த நிம்மதி
எதற்காக இப்படி...?

கொத்துக் கொத்தாய்த்
தியாகங்கள்
குவியல் குவியலாய்த்
தவிப்புக்கள்
முடிவிலியில் ஆன
பாசங்கள்
மூட்டை மூட்டையாய்
விட்டுக் கொடுப்புக்கள்



உண்மைக் காதலில்
உள்ள இத்தனை நிறங்களையும்
உதாசீனப்படுத்தி ஒரு நாள்
கூத்துக்குப் போட்ட
மாத்தாய்க் கொண்டு - பொய்யாய்
மாறுவேடம் பூணும்
பொய்மையும் பாதி
சுயநலமும் பாதியாய்
நாடகமாடி வாழும்
ஆடவன் காதல் சாயம் வெளுக்க !

பத்தோடு பதினொன்று
நீயெனக்கு - எனப்
பச்சோந்தியாய் மாறிய
பச்சைத் துரோகியின்
காதல் நினைவு சின்னங்களுக்கு
காதல் வரம் கொடுத்து
வாழ்கிறது மனது.

உழுத்துப் போன மரமென்றெண்ணியோ
கொத்துகிறது காதலர் தினமென்னும்
மனங்கொத்தி வாழும்
மானுடம் புகழும்
மரங்கொத்திப் பறவை

பச்சை பச்சையாய் ஆடைகள்
சிவப்பு சிவப்பாய் ரோஜாக்கள்
கொச்சை கொச்சையாய்க் கவிதைகள் - காம
இச்சைகளின் இம்சைகள்
இவைகள் காதலர் தினத்தின்
சிறப்பம்சங்களாம் - என
நேற்றுப் பூத்த காதலின் வெற்றியைக்
கொண்டாடுகிறது - நாளை
தோற்றுப் போகும்
காதல்களும் காதலர்களும்

ஆரையூர் தாமரை

# மயில் முட்டை

என் காதல்
என் ரசனைகள்
என் உணர்வுகள் எல்லாமே
மூட்டை கட்டியாகிவிட்டது
முதிர்கன்னி நானானபடியால்

ஒரு புறம்
மயில் முட்டையைக்
கையில் கொண்டு - அடைக்
கோழி தேடித்திரிவதுபோல் அம்மாவின்
தோழிகளிடமெல்லாம் - என்
புகைப்படமிருக்க.

மறுபுறமோ
என் காதலன் கணவனாக
அவதாரமெடுக்க என்னிடமே
சீதனம் கேட்கும் கொடுமை
ஒரே தடவையில்
முப்பதாயிரம் பாம்புகளின்
விசத்தைத் தாங்கும் - ஒரு
முள்ளம்பன்றியாய்.........நான் !

உள்ளம் கனக்க
மெல்ல எழுகிறேன் - காதலின்
விலைபேசலை ஜீரணிக்கமுடியாமல்
தலை முழுகுகின்றேன் காதலையும்சேர்த்து.

ஒரு மயில் முட்டை
இரு கோழிக்குள் அடைக்கு
இருத்தலில்தான் குஞ்சுபொரிக்கும் - இது
இயற்கை என்றால்
காதல் கோழிக்குள் அடைப்படுத்த - என்
மனமென்னும் மயில்முட்டை
கல்யாணக் கோழிக்குள் அடைப்படுக்க
ஆயுத்தப்படுத்துவதும
இயற்கைதான் !




# ஒரு ஜோடிக் கால்கள்

அது.
அங்கு வாழ்ந்து
அங்குமிங்கும் அகதிகளாய்
அலைந்து திரிந்து
களைத்து விட்ட
ஒரு ஜோடிக் கால்கள்.
தன்.
மனைவியின் கல்லறை முன்னே
மண்டியிட்டு கிடக்கும்
ஒரு ஜோடிக் கால்கள்
அன்று.
துப்பாக்கிச் சேவல்களின்
கூவல்களில் விடியும் - அதன்
அப்பாவிக் கிராமம் - அங்கு
பள்ளிக் கூடங்கள்
படைவீரர்களின்
பயிற்சிக் கூடங்கள்
போர் மழையில்
செந்நிறமாகிவிட்ட
நிலக்கடல்கள்
கோலக்குயில்கள் ஒப்பாரி பாட
நிலாம்பரிக்காக ஏங்கும்
47 இரவுகள் - அதில்

தூங்க மறுக்கும் விழிகளுக்குத்
தாலி கட்ட நினைக்கும்
கனவுகள் - அந்தக்
கனவுகளைக் கூட நிரந்தரமாய்
காணமுடியாது போரிலிறந்து
போனான்
அவன்.
அவள்தான் அந்த
ஒரு ஜோடிக் கால்களின் துணைவி
இன்று.
பேச்சுவார்த்தைகள்
புரிந்துணர்வின் சுகப்பிரசவம் - அதன்
"மருங்கை விழாவை"
மண்ணே கொண்டாட
கல்லறையின் பாதி
உடைந்து விட்டதை யெண்ணி
தொலைத்து விட்ட
அன்பை யெண்ணி
இவர்கள் மிட்டும்
குச்சியில் செய்வினை
கச்சபியாக வேண்டும்
என
விம்முகின்றது - அந்த
ஒரு ஜோடிக் கால்கள்





# பிரேமம்


அந்த
ஓலைக் குடிசையின்
ஓட்டைக் கூரை வழியே
ஒழுகிக் கொண்டிருக்கின்றது
பால் நிலா.
அங்கே தொங்கிக் கொண்டிருக்கும்
தூளியில் தூங்கிக் கொண்டிருக்கின்றது
நாளை நாட்டையாளப் போகும்
ஏழை வீட்டு வாரிசு
அதன் பக்கத்தில்
தன் வயிற்றில் தூங்கும்
ஈரத் துணியைத் தடவியபடி
நீரஜ நயனங்களால்
வாசலைப் பார்க்கிறாளவள்
வானத்தை அண்ணாந்து பார்த்தபடி
மணலில் படுத்திருக்கிறான் அவன்.
கணவன் மீதுள்ள காதலில்.......உலைப்
பானைக்குப் பதில்
பூனை சுருண்டு படுக்கும்
எரியாத அடுப்பைக் கூடப்
பெரிது பண்ணாமல்
வெற்றிலை வட்டா ஒரு கையிலும் – எலி
வெட்டி ஆங்காங்கு – தன்
வித்தையைக் காட்டி
வைத்திருந்த பழைய போர்வை
ஒரு கையிலுமாக
ஓடுகிறாள்
கூடுகிறாள் அவனுக்கு நம்பிக்கையை
கூட்டுகிறாள்
உண்மைக் காதலில்
உலகையே வென்றுவிட்ட
வெற்றிக் களிப்பில்
வெற்றிலையை மென்றபடி
"சமாளிப்போம்" என அவன்
உதடுகள் உச்சரித்தது.
அங்கு பிரேமம் பிரம்மமாகிறது
ஓ....... !
நிலவே! அதனால்தானோ
நின்னிருப்பிடம் விட்டு
நீ அவ்வோலைக்
குடிசைக்குள்
குடிபுகுந்தாய்

# நட்சத்திரங்களை இரசிப்பதற்காக....

நீ
தூண்டில் போட
அழைக்கும் போது - என்னை
இரையாக இட்டு
வேறுயாருக்கோ
தூண்டிலிட நினைக்கின்றாய் என்பதை
நான் உணரவில்லை

நீ,
படகில் செல்ல
அழைக்கும் போது - என்னை
துடுப்பாக்கி
வேறுயாருடனோ
பயணிக்க நினைக்கின்றாய் என்பதை
நான் உணரவில்லை

நீ,
கரையேற
அழைக்கும் போது - என்னைப்
படகாக்கி
வேறுயாருடனோ
கரைசேர நினைக்கின்றாய் என்பதை
நான் உணரவில்லை




நீ.
குளிர்காய
.அழைக்கும் போது - என்னை
விறகாய் எரித்து
வேறுயாருடனோ
குளிர்காய நினைக்கின்றாய் என்பதனை
நான் உணரவில்லை.

நீ,
எனக்காகவென்று
அழைத்தது எல்லாம் - என்னை
ஏமாற்றுவதற்காகவேயென
வேறுயாருடனோ
சொல்லிச் சிரிக்கின்றாய் என்பதை
நான் உணர்கிறேன்

நீ,
நட்சத்திரங்களை
இரசிப்பதற்காக - என்னை
இருட்டாக்கிப் பார்க்கின்றாய்
வேறுயாருடனோ
நான்தான் உன்வானம் என்பதை
நீ உணராமல் !





# நிலவே உனக்காக

நிலவே!
வெகுண்டோடு நீ மௌனம்.
சோகமென்னவோ? – உன்னைச்
சேரவிட்ட இராகந்தான் என்னவோ?
இருட்டுப் பருவத்தில் – பால்
முண்டாடு பாலே தாய்முலையில்
நீமட்டும் அருந்தித்தா
நின்னுடல் தேய்ந்தோ – என்
அருமனைச் சேலையில்
கரையிலே வைத்து வைத்த
மேகமென்னும் வெள்ளிச் சரிகைக்குள்ளே – பாதி
முகமறைத்து நீ ஓடுவது – இந்த
ஊருக்குத் தெரியாது
உன்கண்ணிலிருந்து சிந்திய
வெண்துளிகளெல்லாம் – வானில்
பூத்திருக்கும் நட்சத்திரம் என்றென்னும்
ஊருக்கிங்குப் புரியாது – இவ்வுலகின்
உருவாக்கிய உயர் விண்ணைத்தும்
விண்கொண்ட.. இருந்தும் தெரியாது
விட்டுச்சென்றேன் நான்
வானம் விட்டு விழுவதேன் – உன்
காதலுக்காக!



# அம்மா வயிற்றில் குங்குமப்பூக் குழந்தை

ஒரு முறை,
ஒரேயொரு முறை - மகளை-
நேரில் பார்க்க துடிக்கும் மனதை
வேரில் வெந்நீர் விழக்
கொதிப்பது போல் துடிக்கும் மனதை
மறைக்க முயன்று தோற்றுப்போகிறது
கண்கள்.
முதல் மகப்பேற்றுக்கும்
செல்லமுடியவில்லை - இது
இரண்டாவது என்று
மடல் - குழந்தை
பிறக்கும் போது பக்கத்தில்
இருக்க வேண்டும்.
ஆசைகள் தலைப்பாகை கட்டுகின்றன
இலங்கையிலிருந்து
இலண்டன் வரைக்கும்
மகப்பேற்றுக்குச் சென்று
மகிழ்வுடன் திரும்பும்
பெற்றோரைப் பார்க்கப் பார்க்கப்
பொறுமை எல்லை மீறுகிறது
ஒரு நாட்டுக்குள்ளே
ஒரு ஊரிலிருந்து
இன்னொரு ஊருக்குப்



போகமுடியாத நிலை.
சுணங்கும் கணங்கள்
ஒவ்வொன்றும் ரணங்களாக
வீராப்புடன் மட்டக்களப்பிலிருந்து
வன்னி செல்கிறேன் - மகளின்
மகப்பேற்றுக்கு !
எத்தனையோ சோதனைச் சாவடிகளைக்
கடந்து, கையில் குங்குமப்பூ டப்பாவுடன்
வேதனைகளை சுமந்து
பேத்தியோ பேரனோ - இந்தக்
குங்குமப்பூ போல சிவக்கச் சிவக்க
கையிரண்டையும் இறுகப் பொத்திக்கொண்டு
பாட்டியைப் பார்த்துச் சிரிப்பதுபோல
கற்பனையில் மிதந்து - ஒருவாறு
வன்னி சேர்ந்தாச்சு - மகள்
வாசலும் வந்தாச்சு
அம்மம்மா......
ஐந்து வயது நிரம்பிய என்
ஆசைப் பேரன் அம்பிலிருந்து
விடுபட்ட வில்லாய் தன் ஓட்டைப்
பல்தெரிய சிரித்தவாறே
ஓடிவந்து அணைக்கிறான்
ஓடிவந்து கன்னத்தைச் சுடும்
கண்ணீரை மறக்கிறேன்
ஒருகணம் மகிழ்வில் சிந்த
யுத்தம் உடைகிற யுகமாய் மாறுகிறது
மாங்காய்த்தீ.
கொஞ்சல்களூடே - மகளிடம்
குங்குமப்பூவை நீட்டுகிறேன்
குழந்தை விளக்கம் கேட்கிறான்
மழலையில் என்னிடம் !
அம்மா வயிற்றில்
குங்குமம்பூக் குழந்தையிருக்கு - இங்கு
அம்மாவைப் பிணைக்குவைத்து
வவுனியா ஆஸ்பத்திரிக்குபோய்
வவாவை வெளியில் எடுத்துக்
கொண்டு வரலாம்.
வேண்டாம் அம்மம்மா - அது
அம்மா வயிற்றிலே இருக்கட்டும்
செக்கச் செவேலன
சேவக்கோழி கொண்டை போல
இந்தச் சண்டை முடியட்டும்
குங்குமப்பூ பாப்பா
அம்மா வயிற்றிலே சுதந்திரமாக
சிரிச்சபடி இருக்கட்டும் !

# பூக்களின் உலக அழகி

சூரியன் வந்ததும் மலரும்
தாமரையைக் கேட்டால் சொல்லும்
பூக்களின் உலக அழகி
நான்தான் என்று !

சூரியன் செல்லும் திசையெல்லாம்
பார்த்து மலரும்
சூரியகாந்தியை கேட்டால் சொல்லும்
பூக்களின் உலக அழகி
நான்தான் என்று !

வானத்தில் பூக்கும் நிலவைக் கண்டு
நீருக்குள் மலரும்
அல்லியைக் கேட்டால் சொல்லும்
இல்லை நான்தான் அழகி என்று

வீட்டு முற்றத்தில் மலரும்
மல்லியைக் கேட்டால் சொல்லும்
எல்லாப் பூக்களையும் விட
நான்தான் அழகியென்று

முள்ளின் கிரீடம் என்னும்
ரோஜா சொல்லும்
தாஜாபண்ணாதே நான்தான்
அழகி என்று

அந்தி வந்தாலும் மலரும்
மந்தாரையைக் கேட்டால் சொல்லும்
சந்தேகமில்லை நான்தான்
அழகியென்று

கார்த்திகை மட்டும் மலரும்
கார்த்திகை பூ சொல்லும்
காத்திருக்காதே நான்தான்
அழகி என்று



சித்திரையில் வேலியில் மலரும்
முள்முருங்கை மலர் சொல்லும்
கொள்ளையழகி நான்தானென்று !

பன்னிரு வருடத்திற்கொருமுறை மலரும்
குறிஞ்சிமலர் சொல்லும்
அறிந்துகொள் நான்தான் அழகியென்று

ஓடியோடிக் கேட்கிறேன்
ஓக்கிற் மலர், அந்தூரியம் என்று
ஒவ்வொன்றும் நான்தான் அழகி என்கிறது

ஒவ்வொருமலரும் நான்தான் அழகியென
ஒவ்வொரு அழகாய்ப் போட்டியிட
தீராத சந்தேகத்தில்
தீர்ப்புக் கேட்கும்
உலகம் முழுதும் - பூக்களின்
உலாவரும் வண்ணத்துப்பூச்சியிடம்
நான் கேட்க, சொல்கிறது....
கள்ளமில்லாத
உள்ளத்தோடு
க்ளுக் எனச் சிரிக்கும்
மழலையின் சிரிப்பு - உலகத்து
"மலர்களுக்கெல்லாம் தலையான"
அழகு என்று
சிறகடித்துச் சொல்கிறது



# சக்கரைச் சிணுங்கல்

நத்தை வீட்டுக்குள்ளே - குடும்ப
வித்தை கற்றிட அழைக்கையில்
சத்தமில்லாமல் இலைவடிவில் - துடிக்கும்
இதயம் சர்க்கரையாய் சிணுங்கும்

காளான் குடைக்குக் - கீழே
மழையின் ஜலதரங்கத்தைச் சுடச்சுடக்
காப்பி அருந்தி இரசிக்கையில் - என்
இதயம் சக்கரையாய் சிணுங்கும்

ஒயில் புறாச்சிறகு போர்த்தி - இரவில்
முயல் மெத்தையில்
துயில் கொள்ள அழைக்கையில் - ஆப்பிள்பழ
இதயம் சக்கரையாய் சிணுங்கும்

தேவதைகள் சிறகினைக் - கடன்
வாங்கி சுதந்திரமாய் வானில்
பறக்கையில் சிறகுமுளைத்து - குருவி
இதயம் சர்க்கரையாய் சிணுங்கும்

வண்ணத்துப் பூச்சியின் - அழகு
வண்ணம் தொட்டுப் பூக்களில்
ஓவியம் தீட்ட அழைக்கையில் - சின்ன
இதயம் சக்கரையாய் சிணுங்கும்

மூங்கில் குழலுக்குள் - உயிர்
கூடுவிட்டு கூடுபாய
மாங்காய் இதயத்தை அழைக்கையில் - செல்லமாய்
இதயம் சக்கரையாய் சிணுங்கும்

மூன்றாம் பிறையில் - சித்திரை
ஊஞ்சல் கட்டி ஆட
நட்சத்திரத் தோழிகள் அழைக்கையில் - செவ்
இதயம் சக்கரையாய் சிணுங்கும்

சிப்பிக்குள்ளிருந்து - வாழ்
முத்தின் ஒளியிலே
கவிதை எழுத அழைக்கையில் - அழகு
இதயம் சக்கரையாய் சிணுங்கும்
மனித ரோஜாத்தோட்டத்துள் - அன்பைத்
தேனாய் ஊற்றும் தெய்வ
வண்டைக் காண அழைக்கையில் ரோஜா
இதயம் சர்க்கரையாய் சிணுங்கும்

# தாமரைக் குளத்தில் தங்க மீன்கள்



உதிரிப்பூக்களாய்
ஆங்காங்கே சிதறிக் கிடக்கும்
எனது கவிதை - அதை
நூற்கும் பணிக்கான
நோக்கத்தில் - என்
திருமணத்தை ஒத்திவைத்திருக்கிறேன்
திருமணத்தின் பின்
கொத்தாய் மலரும் கணவன்
குழந்தை குட்டிகள் எனும் உறவுகளாய்
எழுதமுடியாமல் போய்விடுமோ - என
உள்ளூறும் பயம்
எங்கே என் கனவுகள்
நனவாகாதோ எனும் சஞ்சலம் - என்
கனவுகளுக்கு சாசனம் வழங்கக்
கையில் பேனாவையும் காகிதங்களையும்
எடுத்துக் கொண்டு குப்புற விழுகிறேன்
கட்டில் மெத்தையில்
படுத்துக் கிடந்தும் எழுதியெழுதிப்
பழக்கப்பட்டு விட்டதால்
மச்சாள் என ஓடிவந்து - என்
மாமாவின் பிள்ளைகள் மூவரும்
என்மேல் விழுகின்றனர்
அவர்களைத் தொடர்ந்து - பெரிய
அக்காவின் குழந்தையும்
என்மேல் வந்து விழுகிறாள்
என் கையிலிருக்கும்
பேனையைப் பறித்து
என்கைநீளமெங்கும்
இரேகைச் சித்திரம் வரைகிறாள்
என் காகிதம் புடுங்கியொன்று - அதைக்
கசக்கி என் கூந்தலில் பூவாய்ச் சூட்டுகிறது
மற்றவொன்று - என்
பின்னல் பிடித்து
என்சிந்தனைக் குதிரையைப் பறித்து
என் முதுகில் சவாரி செய்கிறது




அடுத்தொன்று - என்
உருவத்தை அனிமேஷன் கார்ட்டூனாய்
உருமாற்றினால் எப்படியிருக்குமென்பதை
என்னிடமே கதையாய் அளக்கையில்
ஞ........ஆ.......ஙஞ........ஆ......
ஞ.........ஙஞ........ஆ.......ஆ.....-என்
சின்ன அக்காவின் இரண்டுமாதக் குட்டி
அழுகிறதே இன்னும் தூக்கலையா? - சின்ன
அக்காவின் குரல்
ஓடிப்போய் அள்ளி அணைக்கிறேன்
மாமியை வரட்டாம்
தொலையேசியை தூக்கியபடி
என்னை அம்மா அழைக்கிறாள்
மறுமுனையில் அண்ணாவின் மழலை

என்னை மறக்கிறேன்
என் கனவை மறக்கிறேன்
சலிக்கவில்லை எனக்கு
அலுக்கவில்லை கணக்கு - காரணம்
எல்லாமே இந்த
தாமரைக் குளத்துத்
தங்கமீன்களாச்சே
இரகசியமாய் சிரிக்கிறது
என் கவிதைக் கனவு

ஆரையூர் தாமரை


# மௌன அஞ்சலி

நீலக்கடலின் அடியினிலே
நிலவு உடலை நனைக்கையிலே
கோலக்குயில் ரெண்டு
குலவிடும் வேளையிலே
டும் என்று ஓர் சத்தம்
குயில்களின் முத்தச் சத்தமா? - இல்லை
முகில்களின் முழக்கச் சத்தமா?
என்றெண்ணும் போதே
செந்நிறத்தில் ஓர் குயில்
தொப்பென்று வீழ்ந்தது - அதனருகில்
அட்டகாசமாய் வெற்றிக்களிப்பில்தனைச்
சுட்டதுப்பாக்கியும் அதற்குச்
சொந்தமான குரல்களும்
சில நிமிடங்களின் பின்
குரல்களின் இரச்சல்கள்
சென்றுவிட்டன
ஜோடிக் குயிள்களில்
ஒன்று மட்டும்
குறைந்த சாரத்தில் விட்டுவிட்டுக்
கூவிக்கொண்டிருக்க
வலிகொண்ட மனதோடு
கால்கள் மண்ணுட் புதைய - நானும்
எழுந்து நடக்கின்றேன்
கடலோ!
இப்போது இரைப்பதை
நிறுத்திவிட்டு மௌனமாய்
ஒருவேளை
மௌன அஞ்சலியோ?



# ஒரு பனைமரத்தின் டயரி

ஒரு யானையின் பெருத்த கால் போன்று
செம்மண்ணின் மேல் வேரூன்றிய
கரும்பனையொன்றின் நாட்குறிப்பிலிருந்து - சில
பக்கங்கள் தரும் வாசிப்புக்கள்
மனச்சாட்சியில்லாமல் அரத்தப்பட்டபோது
பனையின் கீழிருந்து ஒன்றாய்
நொங்கு பிடுங்கிக் குடித்த
காதரும் காந்தனும் கண்ணிருடன்
பிரியமனமின்றிப் பிரிந்தது
வியாபாரம் விடுவளவு கஸ்ரப்பட்டுத்
தேடிய பொருட்கள் விட்டு
வெளியேறியவர்கள் விடுகளிலிருந்து - சில
கள்ளர்களின் பொருட்சேர்க்கைகள்
பழகிய நட்புக்காக
பனைமரத்தைக் கட்டியணைத்தபடி
அழுகைகள் யாருக்கும் தெரியாமல் வழியும்
கண்ணிருடன் விட்டுப்போன அவர்களது
கண்ணாடிக் கோப்பை ஒன்றுக்காய்
மனைவியும் தங்கையும் சண்டைக்கோழிகளாய்
நாளை நமக்காகலாம் இந்நிலமை
பனையடியின் கிழ் நின்றவாறே - சண்டையை
வேதனையுடன் விலக்கும் காந்தன்
நாட்களின் நகர்வுகளின் பின்
கிநாக்குப் புருஷன் சொன்னது பலித்துவிட்டது
காந்தனின் மனைவி திட்டியபடி
அகதியாய் போகும்போது புலம்பிழுதபடியே
பனையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு
மனைவி குழந்தைகளூடன் அவனும்
கண்ணிருடன் பிரிந்துபோனது
குண்டுதுளைத்த உடலுடன்
காத்திருக்கிறது கற்பகத்தரு ..............ஒரு
காக்கைகூட ஆறுதல்கூற வந்து
உட்கார முடியாதபடி வெறிச்சோடியிருக்கும்
இருவிடுகளின் பொது வேலியில் நிற்கும்
ஒருதவமுனியாய் உறவுகள் தேடும் - இந்த
ஒற்றைப் பனைமரம் !



# இரகசியத் தாலாட்டு

ஆராரோ ஆராரோ ஆராரோ
ஆரிவாரோ ஆராரோ ஆராரோ
வேரோடு வீதியிலே அகதிகளாய்ப்
போராடப் பிறந்தவனே கண்ணுறங்கு

கள்ளூறும் முள்ளில்லா ரோசாத்தே
கண்ணீரைச் சிந்தாத இராசாத்தியே
கல்லோடு முள்குத்தும் காட்டுக்குள்ளே
காய்கின்ற நிலவேநீ கண்ணுறங்கு

காக்கிகள் கால்கண்டு நாய்குரைக்க
தேக்கிவைத்த கண்தூக்கம் போயொளிக்கும்
அக்கியண்ண சோறில்லா அவஸ்தையுடன்
ஆரிராரோ பாடுகிறேன் நீயுறங்கு

செல்சத்தம் உறக்கத்தையே உலுப்பையிலே
செல்லமே அப்போநீயும் விழித்திடனும்
மல்லாந்து படுத்திடத்தான் பாயுமில்லை
மகராணி மடிமீது விழிவளாக

கொஞ்சநாழி போனாலே நம்மூரில்
குண்டுசத்தம் தூக்கத்தையே கலைத்திடுமே
வஞ்சம்விழி வைக்காமத் தூக்கத்திற்கு
வண்டுவிழி நீமூடித் தூங்கிடுக

இருட்டியதும் உன்னம்மா தானாக
இரகசியமாய்த் தாலாட்டுத் தான்பாட
இருப்பேனோ உயிரோட தெரியாதே
இரத்தினமே இதைநீயும் அறிந்துறங்கு

கொட்டக்கொட்ட ஒளிவீசும் நட்சத்திரமாய்ச்
குட்டிக்குட்டிக் கண்விழித்தால் [illegible]
கொட்டாவியும் நித்திரையும் வருகுதம்மா
கத்தாதே தத்துக்கிளி [illegible] நீயுறங்கு



# பெண்மை ன்பது..?

நிலா அழகு என்பார்கள்
புலமைப்பித்தர்கள் - பெண்ணே
உன் முகத்தைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
நிலவிற்குச் செல்வது பற்றிப்பேசு

மலர் இதழ் என்பார்கள்
கலை ஆக்குனர்கள் - பெண்ணே
உன் உதடுகளைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
மலரின் மருத்துவம் பற்றி ஆராய்.

தேன்பலாச்சுளை என்பார்கள்
தீந்தமிழ்ச்செல்வர்கள் - பெண்ணே
உன் கன்னங்களைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
மொழிவளத்தைத் தேடு

மீனோ மானோ என்பார்கள்
"கானா" கவிஞர்கள் - பெண்ணே
உன் கண்களைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
ஆண்பெண் சமத்துவம் பற்றி பேசு

கூரிய வாள் என்பார்கள்
வீரக்கவிஞர்கள் - பெண்ணே
உன்மூக்கைப் பார்த்த !
நீயோ அதற்கு மயங்காது
சீரிய உன் வாழ்வைத் தேடு
மூன்றாம் பிறை என்பார்கள்
ஆன்றோர்கவிகள் - பெண்ணே
உன் நெற்றியைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
வெற்றிக் கொடிபற்றி யோசி



மூங்கில் குழல் என்பார்கள்
ஓங்குபுகழ் புலமைகள் - பெண்ணே
உன் கைகளைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
தன்னம்பிக்கையின் ஆழம் பாரு

வாழைத்தண்டு என்பார்கள்
யாழிசைப்பாணர்கள் - பெண்ணே
உன் கால்களைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
தடைகளை தகர்த்திடப் புறப்படு

கருங்கடல் என்பார்கள்
உருவகக் கவிஞர்கள் - பெண்ணே
உன் கூந்தலைப் பார்த்து !
நீயோ அதற்கு மயங்காது
கடல் கடந்தும் உன்புகழை நாட்டு

சங்கின் வடிவம் என்பார்கள்
சங்கப் புலவர்கள் - பெண்ணே
உன் கழுத்தைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
பெருமைதனை சங்காக முழங்கு

வெண்டைப் பிஞ்சு என்பார்கள்
வெண்பாக்கவிஞர்கள் - பெண்ணே
உன் விரல்களைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
விரல்களைப் பேனையாக்கி எழுதிடு

தங்கங்கள் என்பார்கள்
மங்காப்புகழ் பாவலர்கள் - பெண்ணே
உன் அங்கங்களைப் பார்த்து
நீயோ அதற்கு மயங்காது
பெண்மை என்பது பேதமையல்ல- என்ற
மாற்றத்தின் முனைப்புக்காக விழித்திடு !

# புல்லாங்குழலாய் மாறும் வேர்கள்

நண்பா! – என்
புன்னகையுடைத்துப் போகின்றாய்
பெண்ணியம் பேசுகிறேனென்று
உன்,
சின்னச்சின்ன செய்கைகளையும்
பூதக்கண்ணாடி கொண்டு
பெரிதாய் காட்டுகிறேன் என்கிறாய்
விதண்டாவாதங்களால் – என்
வேரறுத்துப் போறவனே!
உன்னால் உரைமுடியாததா?
பூக்களின் தேனையுண்டுவிட்டு
பூக்களையே காயப்படுத்தும் – சில
ஈக்களின் கொடூரம்
மலர்ந்து மணம் வீசுமுன் – கருகும்
மலர்களின் சோகம்
அவைகளுக்கு எதிரான
வன்முறைகளுக்கு மட்டுமேதான்
வக்காலத்து நான்
தன்னிலைவாதம் பெண்களுக்கு
தரப்படுவது மனிதாபிமானமன்றோ
ஆண்களுக்கு எதிரானவள்
நானில்லை என்பதை
எப்போது உரைப்போகின்றாய்?
என்றுமே தன்னில் பாதியை சமமாய்
பெண்ணுக்குப் பெருமையுடன்
ஈந்த மகா
ஈசனின் பக்கமே! – நீயெனைப்
புரிந்து கொள்ளும் வேளை எங்கள்
வேர்கள் கூட
புல்லாங்குழலாய் மாறி – உன்
புகழ்களைப் பாடும். !



# ஐந்துமுகத்தனை

காலையில்

வேலைக்குச் செல்ல ஆயுத்தமாகும் - அவன்
வயிற்றைத் தடவிப் பார்த்து
அன்னமூட்டத் தயாராகுகிறாள் - ஒரு
அன்னையாய்

மதியம்

வீடுதிரும்பிய அவனின் - காயக்
கோடுகள் கண்டு
மருந்திடுகிறாள் - ஒரு
மருத்துவராய் !

மாலையில்

சிற்றுண்டியோடு சிரித்தபடியவன் - சிரமத்தின்
நாழிகளைக் குறைக்கிறாள் - ஒரு
தோழியாய்

இரவில்

களைந்து போடப்பட்ட - அவன்
சட்டைப் பையின் பாரத்தில்
குடும்பத்தின் செலவுப் பாரம்
களைகிறாள் - ஒரு
தாரமாய்

நடுஇரவில்,

நான்முகத்தின் அவதாரத்தினையும்
முடித்துத் - தன்
பூமுகத்தின் இறுதியவதாரத்திற்கு
ஆஜராகிறாள் கணவன் முன் - ஒரு
தாசியாய்

அவள்

குடும்பக் கோயிலில் குடியிருக்கும்
ஐந்துமுகத்தனையுடைய - ஒரு
காயத்ரி அம்மனாய்


# நிலாப்பாட்டியின் தீய்ந்த நிலாச்சோறு

காற்று வந்து
கவிதைகள் வாசித்துப் போகும்
பூமேடைக்கு
வானம் வந்து
நிலாவிளக்கை ஒளிரச்செய்யும்
ஓர் இரவில் - எனக்கு
நிலவைக் காட்டிச்
சோறூட்டி - நிலவுக்குள்ளே
அவள்பாட்டி முயலுக்கு
சோறு பொங்கிப் போட்டுக்கொண்டிருக்கும்
முயல்குட்டிபோல - நீயும்
"ஆ........" காட்டு என
ஒவ்வொரு கவளத்தையும் ஊட்டிமுடிப்பாள்
என்பாட்டி - பின்னர்
வீட்டிலுள்ளவர்களுக்கும்
நாய்க்கும் பூனைக்கும் என்று
எல்லா ஜீவன்களுக்கும் உணவளித்துவிட்டு
இறுதியாகப் பானையின் அடி
தீய்ந்த சோற்றைச் சுரண்டிக்கொண்டிருப்பாள்
என்றைக்காவது
இன்னமுது கொடுத்தால் - அதையும்



உண்ணாது யாராவது
பசியென்று வருகிறார்களா - எனப்
படலையைப் பார்த்து இருப்பாள்
அப்பாவின் பழைய நண்பர்களின்
அரட்டையடிப்புக்கான வருகை சாதகமாக அவள்
ஆனந்தமாய் அந்தச் சாதத்தை - அவர்களுக்கு
அளித்துவிட்டு மீண்டும் பானையின்
அடிச்சோற்றை வழிப்பாள்
உடைத்த சின்னக் குண்டு வெங்காயம்
உப்பிலூறிய பிஞ்சு மிளகாய்
கடித்தபடி இரவின்
இன்னொரு மௌனங்களைக்
கலைக்காத ஏகாந்தத்தில்
மோனலிசாவாய்ப் புன்னகைத்தபடி !
ஏதாவது கேட்டால்
ஏதேதோ சொல்லி சமாளிக்கும் அவள்
தீய்ந்த சோற்றுத் தியாகத்தில் - யார்
நெஞ்சையும் எதற்காகவும்
துன்புறுத்தலாகாது என்ற நோக்கம் - பழுத்த
ஓலையின் ஆத்மா எங்கும்
வியாபித்து வழிந்து கொண்டிருக்கும் - அவள்
வழியில் வேர்விட்ட கொடியாய் நான்
என் மகள் நிலவைக் காட்டி
என் பேத்திக்கு நிலவு
என்னும் அழகிய தேசத்திற்கு
விண்கலம் அனுப்புவது பற்றிய
விஞ்ஞாபனங்களால் தானும் உண்டபடி
சோறூட்டிக்கொண்டிருக்கிறாள்.
விருந்துபசாரக் காத்திருப்புக்களையெல்லாம்
கடந்தபடி. !

# திருமணிப்பூரம்



அவள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து
அவள் கையடக்கத் தொலைபேசிக்கு
அழைப்பினை ஏற்படுத்துகிறாள்
அது சிரிக்கிறது
ஒரு மழலையின் குரலில் - அதில்
ஆத்மதிருப்தியடைகிறாள்
மீண்டும் மீண்டும்
அழைப்பினை ஏற்படுத்தித்
தொலைபேசியின் அழைப்புமணிக்குள்
தொலைந்து போகிறாள்.
கையடக்கத் தொலைபேசி
களைத்துப் போகிறது.
அவள் கால்கள்
இருப்புக் கொள்ளாது
குட்டி போட்ட
பூனையைப் போல்
வீட்டினுள் அங்குமிங்குமாய்
அலைந்து திரிய
அவள் கண்கள் - வீட்டு
மூலைக்குள்ளிருக்கும் மண்பானையை
மொய்க்கிறது.
கிருஷ்ணபகவான் தனது
புல்லாங்குழலில் வாசிக்கும்
ஹிந்தோளத்தைக் கேட்டு - அந்தக்
கீதாமிர்தத்தில் தனைமறந்து
ஹிருதயம் ஆனந்திப்பது போல்
அந்த மண்பானையைக்
கண்ட மாத்திரத்தில்
அவளிருதயம் ஆனந்திப்பதோடு
ஆராதிக்கவும் செய்யும்.
மண்பானைக்குள்
மறைத்துவைத்த எதையோ

துழாவி எடுக்கிறாள்.
போயிலைக் காம்பின் சிறுதண்டுகள் போல
கறுத்துச் சுருண்டுபோய்க் கிடக்கும்
எப்போதோ விழுந்துவிட்ட
அவளிரு குழந்தைகளினதும்
திருமணிப்பூறங்கள் - தன்
கிராமத்து வழக்கப்படி
போட்டு வைத்தது.
தாய்மண்ணையும்
தாவரக் குழந்தையையும்
தொடுக்கும் வேரென்ற
தொப்புள் கொடியைப் போன்று - எனது
தொப்புள் கொடியும்
அறுக்கப்படாதிருந்திருந்தால் - நானும்
என் குழந்தைகளைப் போரில்
இழந்திருக்க மாட்டேடயென்று
அழுகிறாள் - தன்னிரு
இறந்துபோன குழந்தைகளையெண்ணி
நகரத்து நாகரீகத்திற்கேற்ப
இரு குழந்தைகளோடு போதுமென்று
இனியொரு குழந்தையும்
பெறமுடியாதபடி
கர்ப்பத்தடைச் சத்திரசிகிச்சை
செய்து கொண்ட அவள் !

# இத்தாலிக் கரடிப் பொம்மை !

எப்போதாவது வரும்
பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
புகைப்படங்களுக்கான அமைப்புக்கள்
இவைகளுக்கு மட்டுமே அழைக்கப்படும்
நான்கு கண்ணாடிகளால் அடைக்கப்பட்ட
வீட்டின் அழகுக்காட்சிப் பெட்டிக்குள்
இருக்கும் குழந்தைகளுக்கு அத்தியமான – என்
இத்தாலிக் கரடிப் பொம்மை !
தவிட்டுநிறப் பஞ்சுத் தேகம்
இருட்டுநிறக் குண்டுக்கண்கள், மூக்கு
கழுத்தில் தங்கநிற றிபன்.
கரடியின் உயரமோ இரண்டடி !
பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும்
கணனிக்காலம் பாலகண்ணன்கள்
விளையாட அழைக்காது – இப்போது
அத்தியப்படுத்தப்பட்டுத் தனிமையில்
இத்தாலியில் இருந்து அனுப்பிய – என்
அண்ணாவின் அன்புப் பரிசு ஆகையால்
கரடி எனக்கு மட்டும் அத்தியோன்யமாய்

குடும்ப பாரத்தைச் சுமக்க
குடும்பத்தை விட்டு தூரமாக
வேற்றுக் கிரகத்தில்
வெள்ளைத்தோல் வேற்று மொழிகளுக்குள்ளும்
ஏலியன்ஸ்களுடனும்
ஏகாந்தமாய் அண்ணா.
வேற்று நகரத்தில்
வேலைக்காகச் சென்றதால்
தினம் தினம்
"மைனஸ்டிகிரிப்" பனிச்செறிவின்
தோல்வெடிப்பையும்
அண்ணாவின் ரகசிய அழுகை களையும்
அதன் வாசனையால் பகிரங்கமாக உணர்த்தி
எதுவுமே தெரியாது போலிருக்கும் – ஒரு
மோனநிலைத் தவமுனியாய்
என் இத்தாலிக் கரடிப்பொம்மை !

# என் சஹானாக் குட்டிக்கு

என் சஹானக் குட்டிக்கு
என் பேனாவின் கவிக்கடிதம்

பவளத்தை எடுத்து
நிலவினில் குழைத்து
முகமதில் வடித்த – அக்காவின்
மகளெனும் மழலையே
அன்புடன் ஒவ்வொரு
நாளையும் தொடங்கிடு!

கவலைகள் மறக்கும்
கருப்பையின் வரமே
கவிதைகள் சுரக்கும் – அந்தக்
கடவுளின் கரமே
ஆசையுடன் ஒவ்வொரு
தேடல்களையும் தொடங்கிடு!

சர்க்கரைச் சிரிப்பு
சஹானாவாய் இசைக்க
துர்க்கையின் செருக்கு
துணிவினில் நிறுத்து
துயர்களை துடைத்துப்
பயத்தினைக் கொழுத்திடு!




அன்னையின் அன்போடு
தந்தையின் உழைப்பு
கண்ணாகக் கொண்டு – கற்றதை
சிந்தையில் நுழைத்து
உனக்கு மிஞ்சியதைத்
தருமங்கள் கொடுத்திடு!

அக்காவின் வீட்டுத்
தொட்டிலில் ஆடும்
குட்டித் தேவதையே – பேனா
கொட்டியதைக் கேளும்
கீதையோடு யதார்த்தத்தையும்
ஏற்றுவாழத் தொடங்கிடு!

பாரதி கனவுகள்
பாரினில் பலிக்க
பாவையே ஆணை
பாதியில் கொண்டு
நாணலாய் உறுதியுடன்
நானிலம் வென்றுவிடு !

வாழ்த்தி முடிக்கிறேன்.
வளமுடன் வாழ
வாஞ்சைமிகு சித்தி
தாமரை



# புதுசும் பழசும்

விளக்குமாறு
இலைச்சிக்கு வந்தால் புதுசு
கண்ணாடிக்கு வந்தால் பழசு

செருப்பு,
கோவிலுக்கு வந்தால் புதுசு
மனிதருக்கு வந்தால் பழசு

கருத்து,
பெற்று வைத்தால் புதுசு
சமர்ப்பித்த கருத்தால் பழசு


பொக்கிஷமும்,
தாவுகள் மேகத்தில் புதுசு
ஆண்டுகள் மேகத்தில் பழசு

புதுமணப்பெண்,
மேலான் ஆசனம் புதுசு
மேலாடி ஆசனம் பழசு

புதல்வன்,
மேலான் ஆசனம் புதுசு
மனம்போல் ஆசனம் பழசு

நிலா,
கவிஞர்க்கு இது புதுசு
காதலுக்கு இது பழசு

காதல்,
உண்மைக்குத் திருமணம் புதுசு
பொய்மைக்குத் திருமணம் பழசு



# ஈமத்தீ

நேற்று
இறந்துவிட்ட
விறகை எரிவதற்கு
ஆயத்தப்படுத்துகையில் கூடவே - ஓர்
பச்சைக்கட்டை
படுபாவி பச்சையை வெட்டிவிட்டான்
ஏசியபடி எடுத்தெறிகிறாள் அவள்
பச்சைக்கட்டை தப்பித்துக் கொள்கிறது
இன்று
வெற்றிலை போட்டுச்
செம்பருத்திப்பூவாய்ச் சிவந்த செவ்வாய்தனில்
மட்டரக சாராயத்தை
வலுக்கட்டாயமாக ஊற்றி
இருக்கதேமும் கருடபுராணமும் ஓதிய
பத்தினிச் சொர்க்கத்திற்காக ஒரு பலியாடாய்
மூத்தமைகளின் கொடுமைகளாய்
விலங்கிடப்பட்டு இறந்துவிட்ட கணவனின்
எரிகின்ற ஈமத்தியில் - சாராயத்
தண்ணீரில் தள்ளாடிக்கொண்டு
உடன்கட்டையேற்ற தயார்நிலையில்
பச்சைக்கட்டையான அவள்
உதிர்ந்து விட்ட சருகிற்காக - நெருப்பில்
உயிரோடு வெந்து கருகுமவள்
அடுப்புக் கட்டின் கீழ் தப்பித்துக்கொண்ட
பச்சை விறகு அழுகிறது
அவளின் மூடச் சமூகத்திற்காகவும்.
அதன் நாளைய ஈமத்திக்காகவும் !



# ஏழையின் பணக்கார வியாதி

அட,
யாரையும் கேட்காமல்
திறந்த வீட்டினுள் நாயாய் – உடல்
உள்ளே நுளைகிறது நோய்.
வைத்தியர் மொழிகிறார்
வந்திருப்பது பணக்காரவியாதியென்று !
"ச்சே"
விவஸ்தை கெட்ட கடவுள்
வியாதியைப் பார்த்துக் கொடுக்கக்கூடாதா?

கடவுளின் கண்களை
ஒருமுறை பரிசோதித்தால் என்ன?
என்று தோன்றுகிறது.
குருட்டுத் தேங்காயில்
கும்பம் வைத்துப்
பூஜிக்கக் கூட முடியாத
ஏழைக்கு ஏனோஷ
பணக்காரவியாதி?

தினமும் வீட்டில்
சக்கரைக்கு வழியில்லாதவனுக்கு
சர்க்கரை இரத்தத்திலாவது இருக்கட்டும்
என்ற பரந்த மனப்பாங்கோ?
இல்லை........
உயர உயரப் பறந்தாலும்
பருந்து விலைவாசியாக முடியாது.
துயரத்தில் முழிபிதுங்கும் இக்காலத்தில் – ஏழையின்
வியாதியிலாவது பணமிருக்கட்டும் என்ற
விழிப்புணர்வோ?

ஜாதிமத பேதம் பார்க்காது
ஏழைப் பணக்காரனென்றும் பார்க்காது
எல்லோருக்கும் வஞ்சகமில்லாது – நோயையாவது
அள்ளிவழங்குவோம் – என்ற
வள்ளல் குணமோ
குறும்புக்காரக் கடவுளுக்கு?

# மூன்றாம்பால் மனிதர்கள்



மீசைமுளைத்த தாமரை
கூந்தல் வளர்த்த சூரியன்
ஆண்கோணி முத்திரை
பதித்த தாமரைப்பெண்
பெண்கோணி முத்திரை
பதித்த சூரியப்பெடியன்
ஹோர்மோன்களின் குறைபாடுகள் - இவை
உணர்வுகள் மதியாச் சமூகக்
காகங்களின் பெயர்சூட்டுவிழாவிற்கு ஆளாக
நாகங்களாய்ப் படமெடுத்து ஆடும் சித்திரவதைகள்
ஏழைக் குடிசையின் முற்றத்தில்
வாலைச்சுருட்டித் தோண்டி முடங்கும்
தெள்ளுப் பிடித்த புழுதிபடா நாய்க்குக்
கிடைக்கும் பாசம் கூட
கிடைக்காமல் ஏங்கும்
வள்ளுவன் வகுக்காத புதுப்பாலினம்
சிரிப்பு முழக்கும் தகரங்களாகவும்
சிவப்பு விளக்குத் தகரங்களாகவும்
சினிமா விகாரப்படுத்தும் கவிதைகள்
சிறிதும் இரகசியமில்லாக் கலைகள் - இருந்தும்
இவர்களும் உணர்வுகளுள்ள மனிதர்களே
ஆண்டவனிட்ட சதியால்
ஆண்பெண்ணற்ற இவர்கள் ஜாதி
அர்த்தநாரீஸ்வரர் என்றும்

சிவசக்தி என்றும்
தெய்வங்களாகப் பூஜிக்கப்படுகையில்
தெருவில் கிடக்கும் குப்பைகளில்
தூக்கியெறியப்படும் பொருள்களாய்
அரவாணி என்றும்
கோவேறு கழுதைகளாய்ப் பார்க்கப்படும் இனங்கள்
புலியாய் எழுந்து உணர்வுகளுக்காய் வாதாடப்
பெற்றதோ நீதி இந்திய தேசத்தின் தேர்தலில்
மூன்றாம் பால் இனத்தின் கீழ் - ஒரு
வாக்குரிமைத் தகுதி
ஆண்கல்லில் ஆண்தெய்வமும்
பெண்கலில் பெண்தெய்வமும்
ஆலிக்கல்லில் படிக்கல்லுமாய்
ஆக்கிடவுரைத்தன ஆகமங்கள் - இங்கே
படிக்கல்லாய்க்கூடப் பார்க்கப்படாமல் இவர்கள்
உரிமைகள் மறுக்கப்பட்ட மனித இனம்
ஆண்பால், பெண்பால் அடுத்தபடியாக
மூன்றாம்பால் இனத்தில் அடங்கி
வாக்குரிமை பெற இரண்டாயிரத்து ஒன்பது
ஆண்டுகள் சங்கம் வைத்துப்
போராட வேண்டியுள்ளதோ - இந்த
மூன்றாம்பால் மனிதர்கள்?





# கழுதையின் பின்னால் காதல்

காதலித்துப் போனபின்தான்
தெரிகிறது - அவனொரு
குடிகாரக் கழுதையென்று
""கோட்சே"" ஆன அவன்
காந்தியாய்த் தெரிகிறான்
காதல் போதையேறிய - என்
கண்களுக்கு மட்டும் !
""கள்"" ஆனாலும் கணவன்
""புள்""(Full) ஆனாலும் புருஷன்
கலிகாலத்தில் என சமாதானமாகிறது
வலி கொண்ட மனது. !
விட்டொழி இல்லையவன்
விட்டையை பொறுக்குவாய் வீதியில்.
சட்டென்று சிவப்புக் கொடி உயர்த்தும்
வீட்டுப் பெரிசுகள் ஒரு பக்கம்.
விட்டுப் பிடித்துப்பார் பச்சைக் கொடி
காட்டும் நட்புகள் ஒருபக்கம்.
நாலாபக்கமும் நான்
நாயாய் ஓடித் தட்டுகிறேன்.
திறக்கிறது நாட்டு வைத்தியர் கதவு.
பிறக்கிறது அவர் வாயிலிருந்து மருந்து
ஆம்......

கழுதையின் சலம் எடு - குடிகாரக்
குழுதைக்கு மதுவில் கலந்து கொடு.
ஜென்மத்திற்கும் மதுவை நாடான்.
இன்பமாய் இனிக்கிறது அவர் வார்த்தை.
கொழுத்தும் வெயிலில் - ஒரு
செம்போடு கரகாட்டக்காரியாய்
செம்புழுதியில் நான் - ஆண்
கழுதையின் பின்னால் காதலால்
பொட்டைக் கழுதையோ - என்னைப்
பார்த்து முறைக்கிறது
வெட்கத்தைவிட்டு ஆண் கழுதையோ - ஒருமாதிரிப்
பார்த்து பல்லைக் காட்டிச் சிரிக்கிறது.
அப்பாவ்.....இடுப்பிலொரு உதை !
அணுகிக் கொண்டே
கண் விழிக்கையில் - செம்
மண்புழுதியில் விழுந்து கிடக்கின்றேன்
பொட்டைக் கழுதை
விட்டையைப் போட்டுக்கொண்டிருக்கிறது - என்னை
செமமாக உதைத்துவிட்டு
தோழியின் கரம்பற்றி
தோல்வியுடன் ஊர்திரும்புகிறேன் - எதிரே
சாராயக்கடைக்காரியைத்
தாரமாக்கிக்கொண்டு என்னவன். !



# நொடிக்கவிதை

ஆனையை உருக்கிப்
பூனையில் குழைத்துப்
பருகும் முறையெதுவோ?
ஆநெய் ஆனையாகப்
பூநெய் பூனையாக – மாறி
மருந்தாகும் முறையேதுவே


நாயுடன் ஒட்டிப்
பேயும் உறவாடும்
வீட்டின் இடமெதுவோ?
நாயுருவிமரம் நாயாக
பேய்ப்புடலைக்கொடி பேயாக – ஒன்றாய்ப்
படரும் வேலியதுவே

கறி கறியைத் தின்ன
கறியுடைமாமி "சூச்சூ" எனவிரட்ட
கறிமுறியப் பாயும்கறியெதுவோ?
முறியும்கறி கீரையாக
கீரைக்குச்சொந்த மாமிவிரட்டும் – அந்தப்
பாயும்கறி ஆடு அதுவோ

தொட முடங்கியும்
தோண்டி முடங்கியும்
தேடும் பொருளெதுவோ
தொடமுடங்கும் மண்புழுவும்
தோண்டிமுடங்கும் நாயும் – ஓடித்
தேடும்பொருள் மண்ணதுவே

வீட்டுக்குள்ளே அடித்தும்
தோட்டத்திலே ஒடித்தும்
வடிக்கும் கலையெதுவோ?
வீட்டுக்குள்ளே ஆண்பிள்ளையையும்
தோட்டத்திலே முருங்கமரத்தையும் – நன்றாய்
வளர்க்கும் கலையதுவே

பூனை வளர்த்தானுடன்
பிள்ளை வளர்த்தானும்
கூடும் இடமெதுவோ?
பூனை வளர்த்தான் குப்பைமேனியாக
பிள்ளைவளர்த்தான் வசம்பாக – கூட
மருந்தாகும் மூலிகை வைத்தியரிடமே!



# சிறகு முளைத்த நெசவாளிகள்


பறந்து பறந்து இலைகளால்
குறுக்கும் நெடுக்குமாய்
சுவெற்றர் பின்னும்
சிறகு முளைத்த நெசவாளிகளாய்
மென்மையான, மொத்தமான பின்னல்
தான் மட்டுமே செல்வதற்கான வழி
கூட்டினுள்ளே இரு அறைகள்
மேலும் கீழுமாய் - அதில்
பச்சைச்சாணி பூசி, அதன் மேல்
மின்மினிப் புச்சிகளை அப்பி
மின்விளக்குகளாக்கி
தென்றல் விசிறியாக
இலவச மின்சாரம், அன்றாடம்
பெட்டைக்குருவிகள்
பாஉத்து மகிழ்ந்து படைத்த கூட்டில்
பெண்டாட்டியாகும் விசித்திரம்
நாளைய முட்டைச் சத்தத்திற்கான
இன்றைய முத்தச் சத்தம்
மரக்கிளைகளில், தூக்கணாங்கள்.
போட்டது போல், தூளியாய் ஆடும்
ஒரு மாளிகை வீடாம் இந்தச்
தூக்கணாங் குருவிக் கூடுகள்
சங்கீத முத்தங்கள் தினம்
சந்தோஷமொத்தங்கள்.

# முயல் மெத்தை



யுத்தமழையில்- என்
உறவுகள் கரையத்
தனிமையானேனே!
தனிமை போக்கவே
பெண்முயலே - உனைத்
துணையாய் வளர்த்தேனே.
உன் தனிமை போக்கவே
உனக்கொரு ஆண்துணையைக்
கொணர்ந்தேனே.
கரட்கிழங்கோடு அடம்பன் கொடியும்
வேரோடு புடுங்கி உண்ணத் தந்தேனே.
விட்டுக் கொடுத்துண்ணும்- உன் துணைக்கான
உண்ணலை அதில் கண்டு
வியந்தேனே.!. என்
ஆசைமுயலே உன்
சுதந்திரமான திரிதலுக்காய்- என்
ஆசைப்பூந்தோட்டத்தில்
மேய்ச்சலுக்கு விட்டேனே.
தென்னை மரத்தடியில்
வல்லாரைப் பாத்தியை
உல்லாசமாய் உண்பாய்.
வெண்பஞ்சு மேகங்கள்
மண்மீது தவழ்வது போல்
பெண்முயலே நீ ஜோடியுடன்
துள்ளிப் பாயும் அழகை - சுவவையைக்
கிள்ளிப் போட்டு ரசித்திருப்பேனே.
ஆனால் இது என்ன புதிதாய்?
இன்று மட்டும்- உன்
கூட்டைவிட்டு உன்ஜோடியுடன்
கூடிக்குலவுவதை விட்டு
வெளியே வர மறுக்கிறாய்?
வயிற்றின் நடுவே உரோமங்களைப்
பிய்த்துப் பிய்த்து
மண்மேடையில் போடுகிறாய்- அதில்
வெண்ணிற எலிகள் போல்
செந்நிறக் கண்களுடன் குட்டிகள்
ஈனுகிறாய்- தலையிலிருந்து
உதிர்ந்து விட்ட முடிபோல்
உயிர்கள் மதிப்பிழந்த காலத்தில்
புதிதாய் உலகிற்கு வரும்- சின்ன
உயிர்களுக்குப் பஞ்சுமுடி மெத்தையோ?

ஆரையூர் தாமரை



# முகாரி பாடும் முயல்கள்

அந்தச் சவக்காலையில்
என்றும் இல்லாதவாறு சனத்திரள்
இன்று என்ன சவக்காலைப் பெருநாளோ?
இல்லை,
நாங்கள் அகதிகள் – இங்கு
குடியேற்றப்பட்டுள்ளோம்.
என்ன...?
அதிர்ச்சியில் உறைகிறேன்.
பிறிட்ஜ்/க்குள் வைக்காத – மனித
ஐஸ்கட்டியாய்.
நைஸாக கண்களை ஓடவிடுகிறேன்
கல்லும் முள்ளும் – சவக்
கட்டிடமும் முள்ளுக்காடுகளும்
மண்டையோடும் மலர்வளையங்களும்.
அதே,
நேற்றுத்தான் புதைக்கப்பட்ட
மண்குடமும்
இறந்துவிட்ட ஆத்மாக்கள்
இளைப்பாறக்கூட முடியாமல்
அவர்களது கல்லறையில்
ஆராரோ தூங்குகிறார்கள்.
சவர்க்காரக்கட்டிகளை – ஐதாகப்
போட்டது போல்
சவக்கட்டிடங்களின் தூரதரிசனம்.
அவற்றினிடையே தமிழ் அகதிகள்
இதோ!
காற்றுக் கறுப்பு பட்டுவிடும் என – தீட்டு
முற்றத்துக்கே கொண்டுவராத
கைக்குழந்தைத் தாய்மார் கண்ணீருடன்
பூப்பெய்திவிட்டு,
பேய்பிசாசு பார்வை படாமலிருக்க
இரும்புப் பாக்குவெட்டியுடன்
வீட்டுக்குள்ளே இருக்கும் சமைந்த
கன்னிகளுடனான தாய்மார் கண்ணீரோடு
சவக்காலைக்குள்ளே ஒருபக்கம்
பூவலைக் கிண்டி சிரட்டையில்
தாகம் தீர்க்கும் கிழவி கண்ணீரோடு

பால்வற்றிய தாயின்
முலைக்காம்பைச் சப்பித் துப்பிஅழும்
குழந்தையின் கண்ணீரைத்துடைத்தபடி
குமுறுகிறாள் ஒரு தாய் என்னோடு
நேற்று,
உலர் உணவு பகிர்ந்தார்கள் –நான்
கடைசிவரிசை , கிடைக்கவில்லையென்றும்
நாளை,
என்.ஜி.ஓ வினால் – இங்கு
தண்ணீர்க் குழாய் போட்டுத் தாரதா
சொல்லியிருக்காங்க
திடீரென ஓர் அலறல்– அந்த
மூணாவது கட்டிடத்துக்குப் பக்கத்துல – ஒரு
புள்ளத்தாச்சிப்புள்ள – வலியால
நேற்றிருந்து துடிக்குது.
நான் வாறேன்– என்றபடி
ஓடுகிறாள்– எதிரே
ஓர் இளம் பெண்
வானம் போடும் செந்தூரத்தை
வேதனைகளுக்கு இடையே கூட
வேடிக்கையாக இரசிக்கிறாளோ
இவள்...?
நான் நான் அவளை நெருங்குகிறேன்– இந்த
செந்தூரம் இன்று
கொஞ்சதூரம் இருட்டினால் நல்லது
கையில் சுளகுடனும்
உலக்கையுடனும். அவள்
சொல்லிக்கொண்டே – என்
கேள்வியுடனான உயர்ந்த
புருவத்தையும் பார்வையையும்
புரிந்துகொண்டு – ஒரு
சவக்கட்டிடத்தின் பின்
மறைவாக உட்கார உலக்கை மறுக்க
மறைப்புக்கு சுளகு – இதுதான்
எங்க கக்கூஸ்
உங்களுக்கும் வேண்டுமா?
பட்டென்று கேட்டுவிடுகிறாள்.
இல்லை – நான்கூட
வானம் இருட்டாதா? என்றுதான்
பார்த்தேன்– அங்குள்ள
ஒவ்வொருவரின் விழிகளும்
முகாரி பாடும் முகில்களாகக் கண்டு.
சட்டென்று விலகுகிறேன்

# நண்பனின் காதலி



ஒவ்வொருமுறையும் - நம்
நான்கு கண்கள் மட்டும்
காதலைப் பகிரும் போது
நந்தியாய் ஒரு ஜோடிக் கண்கள்- என்னை
சிந்திக்க விடாமல்
நண்பனின் காதலி" அவள்
என்கிறாய் நீ.

வெயிலிலும் மழையிலும்
உயிர்க்குடையாய் உனக்கு நான்
உருமாறும் வேளையிலும் ஓர்
உருவத்தின் நிழலாடிப் போகும்
"நண்பனிக் காதலி" அவள்
என்கிறாய் நீ.

உனக்காக- என்
திரிதல்கள் ஒவ்வொன்றையும்
தெரிந்து பார்க்கிறேன்
தெரிகிறது மூன்றாவதாய் ஓர் நிழல்.
சுற்றும் என்னை
சிந்திக்க விடாமல்
மந்திரிச்சு விட்டவன் போல்
"நண்பனிக் காதலி" அவள்
என்கிறாய் நீ.

இன்று,
இருவருக்கும் இடையில்
நிழலாய் வந்த
"நண்பனின் காதலியை" நிஜமாக்கி விட்டு
"நிழல்" நான்
என்கிறாய் நீ.

# ஊர்த்திருவிழாவில்

அட்டகாசமாய்ப்
பட்டாசுகள் வெடிக்க
ஆடம்பரமாக – ஒரு
ஊர் கூடி சொந்த பந்தத்துடன்
ஊர்த்திருவிழா போன்று நடத்தும்
திருமண விழா.

முன்பின் தெரியாத
புதுப்புது மனிதர்க்கு முன்னே
காட்சிக்கு வைக்கப்பட்ட – ஒரு
கலைப்பொருளாய் அலங்கார
ஜொலிப்புக்களுடன் மௌனித்து
வெட்கமும் சங்கடமும்
ஜோடியாக வந்து
ஜோராக ஆளை
வேரோடு புடுங்கித்தின்ன.

எதையோ தொலைத்தது போல்
எங்கேயோ தொலைந்தது போல்
இத்தனை காலமும்
பெற்று வளர்த்த பெற்றவர்கள்
இன்பத்திலும் துன்பத்திலும் கூடவே
இணைந்திருந்த சகோதரர்கள்
தோள் கொடுக்கும் தோழமைகள்
உதவும் உறவுகளின்
கதவுகள் விட்டு
யாருமே இல்லாமல்
யாரோ நேற்றுப்
புகைப்படத்தில் காண்பித்த
புதுமுகத்துடன்
தனித்து விடப்பட்ட போது
ஊர்த்திருவிழாவிலே
காணாமல் போன குழந்தையாய்க்
"திருதிருவென முழித்தபடி
கண்கலங்கும் மணமகள்.



# திரிசங்கு சொர்க்கம்

என்,
மூன்று பிள்ளைகளில்
மூத்த மகன்
பணக்கார வர்க்கம்
பஞ்சு மெத்தையில்
மாடமாளிகையில்
சொர்க்க நிம்மதியுடன் அவன்
உறங்குகிறான்.
மூன்றாம் மகன்
ஏழை வர்க்கம்.
மணல் மெத்தையில்
மரத்தடியின் கீழ்
சொர்க்க நிம்மதியுடன் அவன்,
உறங்குகிறான்.

இரண்டாம் மகனோ,
இரண்டும்கெட்டான் வர்க்கம்.
வெளியுலகிற்குப்
பாவனை காட்டிவிட்டு
மணலும் இல்லாமல் மெத்தையும் இல்லாமல்
உறக்கத்தைத் தொலைத்துப்
புரண்டு கொண்டிருக்கிறான்
சொற்ப நிம்மதியுடன் அவன்.
நடுத்தர வர்க்கங்கள் எல்லாவற்றுக்கும்
திரிசங்கு சொர்க்கம் தானோ
இவ்வுலகு.
புலம்புகிறேன் நான்
மூவரையும் ஈன்றெடுத்த
பூமாதேவியென்னும் அன்னையானபடியால்,
அந்தரத்தில்,
ஆடிக்கொண்டிருக்கிறது
திரிசங்கு சொர்க்கமாய்
நடுத்தர வர்க்கம் !



# அன்புடன்.....!

இரவில் பூக்கும்- தன்
நிலவு சொல்லும்
அன்புடன் நாளையைத் தொடங்கு.

அதிகாலையில் கூவும் - கொண்டைச்
சேவல் சொல்லும்
அன்புடன் காலையைத் தொடங்கு.

பகலைக் காட்டும் - பொற்க
கதிரவன் சொல்லும்
அன்புடன் மாலையைத் தொடங்கு.

மாலையில் சிவக்கும் - அந்தி
வானம் சொல்லும்
அன்புடன் இரவைத் தொடங்கு.

ஆறடியில் நீளமாய்க் - காத்திருக்கும்
சவக்குழி சொல்லும்
அன்புடன் ஒவ்வொருநாளையும் தொடங்கு.



# ஆரையூர் கந்தசுவாமி

அம்மையும் அப்பனும் ஆனவன் நீ- எங்கள்.
அன்பனாய் நண்பனாய் வந்தவன் நீ தூய
அருளுமாய் ஒளியுமாய் இருப்பவன் நீ -எங்கும்
அடியார்கள் போற்றிடும் கந்தனும் நீ !

ஆரையூர்க் கோயிலின் கந்தசுவாமி- மன
ஆறுதல்தர வாராய் எங்கள் சுவாமி- உயர்
ஆறுபடை வீடுடைய விந்தனே -என்றும்
ஆதரித் தெமைக்காப்பாய் கந்தனே !

இன்னல்கள் எமைத்தேடி வரும் போது - எம்முன்
இருந்துமே காப்பாற்றும் கந்தசுவாமி- உந்தன்
இணையடியென்றும் நாம் தொழுது நின்றோம்- இங்கு
இன்பமாய் வாழ்ந்திட அருள் செய்வாய்.

ஈடில்லாப் பெருமையைப் பெற்ற கந்தா! தந்தை
ஈசனுக்கே ஞானம் சொன்ன கந்தா- அன்னை
ஈஸ்வரி மகாசக்தி பெற்ற மைந்தா - உலகின்
ஈடிணை அற்றவனாய் ஆன கந்தா !

உதயத்தின் முன்னேநாம் எழுந்திருப்போம்- எம்
உள்ளம் உருகிடப் பாடி நிற்போம்.- நாம்.
உயர்ந்த நிலைபெற அருள்வாய் கந்தா - இவ்
உலகின் துன்பங்கள் ஒழிப்பாய் கந்தா.

ஊமைகள் பேசிம வைத்திடுவான்- கந்தன்
ஊரெல்லாம் வாழ்ந்திடச் செய்திடுவான் - நம்மை
ஊட்டத்தில் என்றென்றென்றும் காத்திடுவான்- அவனை
ஊக்கமுடன் நாளும் வணங்கிடுவோம்.

ஏழிருவுலகமும் காக்கும் தெய்வம் - எம்மான்
ஏழிசைப்பாடலை விரும்பும் தெய்வம்- அந்த
ஏந்தல் திருவடி என்றும் போற்றி - இந்த
ஏழைகள் மண்ணிலே வாழ்ந்திடுவோம்.

ஐயமும் அச்சமும் எமக்கில்லை என்போம் - எங்கள்
ஐயனருள் துணை காத்திடும் என்போம்- அவன்
ஐம்புலன் வென்றெமைக் காத்திடுவான்- என்றும்
ஐசுவரியம் தந்தெமை ஏற்றிடுவான்.

ஓகாரத்தில் ஒய்யாரமாக நிற்பான் - வேலன்
ஒழுக்கத்தில் எங்களை ஓம்பிடுவான் -என்றும்
ஒருகுறைவாராது காத்திடுவான் - அவன்
ஒரு போதும் எங்களைக் கைவிட்டிடான்.

ஓம் சரவணபவ என்று நிற்போம்- எம்முன்
ஓடியே கந்தனும் வந்திடுவான் - நாம்
ஓமம் செய்யாமலே தோன்றிடுவான் - உண்மை
ஓதியே எந்நாளும் வாழ்ந்திடுவோம்.

ஔவைக்குத் தமிழ் தந்த ஆறுமுகன்- உயிர்
ஔடதமாய் நிற்கும் வேல்முருகன்- என்றும்
ஔதாரியம் அளித்தாட் கொள்ளுபவன்- எம்மை
ஔவியம் சேராமல் காத்திடுவான்.







## பாய்

இரவில் விரியும் மல்லியோ
இந்து தேடும் அல்லியோ
கண்கள் மூடும் பள்ளியோ
கனவுகள் இலவசக் கல்வியோ





## இரவு

காலையின் தாழ்ப்பாள்
நாளையின் திறவுகோல்

## பிரார்த்தனை

உள்ளம் திறந்தது
உதடுகள் பேசும்
இறைவன் கேட்க !





# தியானம்


உதடுகள் மூடி
உள்ளம் கேட்கும்
இறைவன் பேசுவதை !

# ஓவியப்பார்வை

மாற்றங்கள் தொடரும் போதும்
எதிர்ப்புக்கள் தோன்றும் போதும்
ஆண்டவன்கூட ஒரு ஓவியப்பார்வைதான்

# கல்வி

குருடனை விழிக்கச் செய்யும்
திருடனை திருந்தச் செய்யும்
முடவனையும் வழி நடத்தும்
மடையனையும் மகனாய் மாற்றும்.



## மது

குடிக்கும் மனிதன் உயிரை
அவனையறியாமலே குடிக்கும்
திரவ அரக்கன்.



# திருமணம்


கணவனால் பாதி சுதந்திரம்
பறிபோகும்.
குழந்தையால் மீதி சுதந்திரம்
பறிபோகும்.
ஆகமொத்தம் ஒரு பெண்ணின்
முழு சுதந்திரமும்
பறிபோகுமொரு சடங்கு !



## மழலை

சொர்க்கத்தின் கதவுகள்
திறக்கும் புதுப் பூபாளம்




தாய்மடி
ஒரு குழந்தை
முதன் முதல் கற்கும்
பள்ளிக்கூடம்

## புரவலர் புத்தகப் பூங்கா
### நிர்வாகக் குழு

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர்
(நிறுவனர் - தலைவர்)

கலைஞர் கலைச்செல்வன்
(செயலாளர்)

சமூகஜோதி எம்.ஏ.றபீக்
அந்தனி ஜீவா
திருமதி ஞானம் ஞானசேகரன்

# புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடுகள்...

| எண் | நூல் | ஆசிரியர் | வெளியீடு |
|---|---|---|---|
| 01 | பீலிக்கரை (சிறுகதைகள்) | பிரமிளா செல்வராஜா | ஆகஸ்ட் 2007 |
| 02 | கனலாய் எரிகிறது (கவிதைகள்) | கே.எம்.ஏ.அஸீஸ் | செப்டெம்பர் 2007 |
| 03 | சலங்கையின் நாதம் (வரலாற்று நாடகம்) | கலைஞர் எம்.உதயகுமார் | ஒக்டோபர் 2007 |
| 04 | தேன்கூடு (பாலர் கவிதைகள்) | கல்லொளுவை பாரிஸ் | நவம்பர் 2007 |
| 05 | மைவிழிப் பார்வையில் (மாதா கட்டுரைகள்) | ஷாமலா ஸ்டீபன் | டிசம்பர் 2008 |
| 06 | நான் நீ கடவுள் (உருவகக் கதைகள்) | கலை அமுதன் எம்.சி.எம்.இக்பால் | ஜனவரி 2008 |
| 07 | ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும் (சிறுகதைகள்) | சிவலு மனோகரன் | பெப்ரவரி 2008 |
| 08 | ரயிலுக்கு நேரமாச்சு (சிறுகதைகள்) | கவிப்பிரியா நிஷா | மார்ச் 2008 |
| 09 | விழிகள் சுவாசிக்கும் இரவுகள் (கவிதைகள்) | ஏ.எம்.எம்.ஜாபீர் | ஏப்ரல் 2008 |
| 10 | தடயங்கள் (கவிதைகள்) | மருதூர் ஜமால்தீன் | மே 2009 |
| 11 | புதிய கதவுகள் (சிறுகதைகள்) | மாரி. மகேந்திரன் | ஜூன் 2008 |
| 12 | ஒரு கலைஞனின் கதை (நாடகம்) | கலைஞர் கலைச்செல்வன் | ஜூலை 2008 |
| 13 | பச்சைப் பாவாடை (சிறுகதைகள்) | எச்.ஏ.எம்.தாஹிர் | ஜனவரி 2009 |
| 14 | இளமை எனும் பூங்காற்று (சிறுகதைகள்) | ஷமீலா இஸ்மத் | பெப்ரவரி 2009 |
| 15 | இதயமுள்ள பாரதி (கவிதைகள்) | பொன் பூபாலன் | மார்ச் 2009 |
| 16 | மேகவாழ்வு (கவிதைகள்) | வெலிமடை ரபீக் | ஏப்ரல் 2009 |
| 17 | வேர்கள் அற்ற மனிதர்கள் (கவிதைகள்) | மருதநிலா நியாஸ் | மே 2009 |
| 18 | வெற்றிலை நினைவுகள் (கவிதைகள்) | ஜோ.ஜெஸபுரின் | ஜூன் 2009 |
| 19 | விடுமுறைக்கு விடுமுறை (சிறுகதைகள்) | பவானி தேவதாஸ் | ஜூலை 2009 |
| 20 | மேட்டுநிலம் (சிறுகதைகள்) | மு.சடாட்சரன் | ஆகஸ்ட் 2009 |
| 21 | விடியலில் ஓர் அஸ்தமனம் (நாவல்) | எம்.ஏ.சுமைரா | செப்டெம்பர் 2009 |
| 22 | மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள் (ஓர் ஆய்வு) | இரா.சர்மிளாதேவி | ஒக்ரோபர் 2009 |
| 23 | விற்பனைக்கு ஒரு கற்பனை (கவிதை) | ஆரையூர் தாமரை | நவம்பர் 2009 |
| 24 | கண்ணுக்குள் சுவர்க்கம் (நாவல்) | காத்தான்குடி நஸீலா | டிசம்பர் 2009 |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| vi | 12 | அங்கப்பிள்ளை | தங்கப்பிள்ளை |
| | 17 | ரோயாய் | சூர்யாய் |
| viii | 3 | ஞாமய | சேஷாகா (Shoka) |
| | 4 | முகவரி | முகாரி |
| 5 | 4 | பிறப்பும் | பிறப்பு |
| 6 | 19 | விணை | வீணை |
| 8 | 12 | மடுவாரும் | மடுவாகும் |
| | 23 | அழமட்டங்களே | அடிமட்டங்களே |
| 12 | 16 | காதல் | சாதல் |
| 13 | 31 | ஆயத்தப்படுத்துவதும | ஆயத்தப்படுத்துவதும் |
| 15 | 7 | அனவள் | அவனவள் |
| 19 | 8 | தேய்வதேடி | தேய்வதேனடி |
| 21 | 27 | மாங்காய்த்தீ | மாங்காய்த்தீவு |
| | 34 | அம்மாவைப் | அம்மம்மாவைப் |
| 22 | 22 | வந்தாலும் | வந்தால் |
| 23 | 13 | கேட்கும் | கேட்டு |
| 24 | 23 | சொல்கிறது | செல்கிறது |
| | தலைப்பு | சக்கரைச்சிணுங்கல் | சர்க்கரைச்சிணுங்கல் |
| | 8 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| | 12 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| | 20 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| | 24 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| | 28 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| | 32 | சக்கரையாய் | சர்க்கரையாய் |
| 26 | 12 | தொலையேசியை | தொலைபேசியை |
| 27 | 17 | குயிள்களில் | குயில்களில் |
| | 19 | சாரத்தில் | ஈரத்தில் |
| 29 | 2 | ஆரிவாரோ | ஆரிவரோ |
| 30 | 13 | கண்ணங்களைப் | கன்னங்களை |
| | 23 | பார்த்த | பார்த்து |
| 34 | | போட்டுக்கொண்டிருக்கும் | போட்டுக்கொண்டிருக்கிறாள் |
| 37 | 16 | மாட்டேயென்று | மாட்டேனென்று |
| 38 | 31 | அழகைகளையும் | அழுகைகளையும் |
| 38 | 34 | மோனறிலைத் | மோனநிலைத் |
| 42 | 14 | இருக்கதேமும் | இருக்குவேதமும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 43 | 16 | ஏனோக்ஷ | ஏனோ |
| | 19 | சக்கரை | சர்க்கரை |
| 44 | 13 | புழதிபடா | புழதிபடர் |
| | 18 | தகரங்களாகவும் | தரகர்களாகவும் |
| | 20 | இரகசியமில்லாக் | இரசிகரில்லாக் |
| 45 | 5 | என்றும் | என்று |
| | 13 | ஆலிக்கல்லில் | அலிக்கல்லில் |
| 47 | 2 | குழதைக்கு | கழுதைக்கு |
| 47 | 22 | சாராயக்கடக்காரியை | சாராயக்கடைக்காரியை |
| 48 | 24 | அதுவோ | அதுவே |
| | 35 | முருங்க | முருங்கை |
| 49 | 1 | இலைகளால் | இழைகளால் |
| | 4 | நெசவாளிகளாய் | நெசவாளிகள் |
| | 10 | புச்சிகளை | பூ ச்சிகளை |
| | 15 | பாஉத்து | பார்த்து |
| 50 | 21 | உண்பாய் | உண்பாயே |
| 51 | தலைப்பு | முயல்கள் | முகில்கள் |
| | 15 | அதே | அதோ |
| | 16 | புதைக்கப்பட்ட | உடைக்கப்பட்ட |
| | 17 | மண்குடமும் | மண்குடம் |
| | 27 | தீட்டு | வீட்டு |
| 52 | 6 | உலஉ உணவு | உலர் உணவு |
| | 25 | கொஞசதூரம் | கொஞ்சதூரம் |
| | 33 | மறுக்க | மறுபக்க |
| 53 | 10 | ஓர் | ஒரு |
| | 18 | சுற்றும் | சற்றும் |
| 56 | 1 | தன் | தண் |
| | 7 | பொற்க | பொற் |
| 61 | 1 | திறந்தது | திறந்து |
| 63 | 2 | எதிர்ப்புக்கள் | எதிர்பார்ப்புக்கள் |
| 31 | 1 | மூங்கிள் | மூங்கில் |
| 43 | 4 | நுளைகிறது | நுழைகிறது |



கவிதைத் தடாகத்தில் ஒரு புது மலர்

## ஆரையூர் தாமரை


இயற்பெயர் : செல்வி தாமரைச்செல்வி செல்லத்தம்பி

புனைபெயர் : ஆரையூர்த் தாமரை

முகவரி : தசபதி, ஆரையம்பதி 1

தொலைபேசி : 0652245549, 0776912031


பிறந்த திகதி : 11.03.1978

பெற்றோர் : க.செல்லத்தம்பி (கிராமசேவை ஊழியர்) ஆரையூர் இராசையா தவமணிதேவி

கல்வி : மட். வின்சென்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை

கல்வித் தகைமை : கலைப்பட்டதாரி (ட்.யு.), உளவியல் டிப்ளோமா.

செயற்பாடுகள் : கவிதை, ஓவியம், நாடகம், பாட்டு, கிராமிய நடனம், கைப்பணிக்கலைகள், அறிவிப்பு.

பரிசுகள், பாராட்டுக்கள் : ஒரு ஜோடிக்கால்கள், கவிதை : முதற்பரிசு (மண் முனைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் போட்டி. கடவுள் நண்பனுக்கு : கவிதை 3ஆம் பரிசு (ம.பற்று பிரதேச செயலக கலாசாரப் போட்டி 2008) சுவரோவியம் : ஆறுதல் பரிசு (சுற்றாடல் அமைச்சு) அகலிகை நாட்டுக் கூத்துப் பாடல் : முதற்பரிசு. வ.கி. மாகாண தமிழ்த்தினப் போட்டி.

முதல்நூல் : புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடான "விற்பனைக்கு ஒரு கற்பனை"

– அன்பு மணி


Printed by : Design Lab, 077 53 83 139, www.dsignslab.com

VITPANAIKKU OTU KATPANAI

ISBN 978- 955-095-06-8